ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும் மின்னிதழில் வாசிக்க eelanadu.ca முகநூலில் நாளாந்தச் செய்திகள்!

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy (ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710


**மலர்:- 31, 22 நவம்பர் 2024 இதழ்:- 25**

# ஈழநாடு

**பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600**


NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 23 செப்டம்பர் 2024 முதல் 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

மந்தையாய் வாழ்ந்த எந்தையர் வாழ்வில்
விந்தைகள் புரிந்து சிந்தையைக் கவர்ந்த
எங்கள் கரிகாலனே!
ஈழத்து மனிதனை தமிழனாய் உலகுக்கு
தரம் பிரித்துத் தந்த தலைவனே!
தமிழர் அம்மணத்தை மறைக்க
சோழர் கொடியில் ஆடை தந்தவனே!
தமிழீழத்தின் ஒரு பிடி மண்ணும்
பகைவனைக் கொல்லும்
அதிசயம் நிகழ்த்தியவன் நீ!
தமிழக்குத் தோற்றமில்லை! - உனக்கு
வயதுமில்லை! மறைவுமில்லை! தமிழோடு சேர்ந்து
உன் புகழ் வாழ வாழ்த்துகின்றோம்!
வாழ்க நீ! தமிழர் நாம் வாழ்வதற்கே!

அன்புடன்
T.K.பரமேஸ்வரன் -ஈழநாடு



# தமிழரசுக்கட்சியைத் தொலைத்த வடக்கும் தேடி எடுத்த கிழக்கும்

தமிழ்த்தேசிய அரசியல் வடக்கில் மக்களால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. யாழ், வன்னி மாவட்டங்களில் தமிழரசு (2), காங்கிரஸ் (1), ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு(1), இணைந்து நான்கு ஆசனங்களை பெற்றுள்ளன. கிழக்கில் இதற்கு மாறாக மக்கள் பெரும் அங்கீகாரத்தை வழங்கியுள்ள னர். தமிழரசு மட்டும் தனித்து ஐந்து ஆசனங்கள். இந்த முடிவு தமிழ்த் தேசிய அரசியலின் காப்பாளர்கள் யார்? என்ற கேள்வியை எழுப்புகிறது.(21ம்பக்கம்)

## தனித்துப் போட்டியிட்ட தமிழரசுக்கட்சிக்கு வடக்கு கிழக்கு மக்கள் வழங்கிய ஆணை! பாராளுமன்றத்தில் 3வது பெரிய கட்சியாகியது!





KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

## SELLING OR BUYING A HOME?

**www.AgentSiva.com**

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




21 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


**Simcoe St N. & Conlin Rd**

**Oshawa** **$279,000**
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!

**Sheppard Ave & Allen Rd**

**Toronto** **$619,000**
2+1 Beds • 2 Baths • 4+1 Rooms
Close To Subway, Ttc, York University

**Neilson/Tapscott**

**Scarborough** **$445,000**
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

**Kennedy Rd / Hwy 401**

**Scarborough** **$699,000**
2+1 Beds • 2 Bath • 6 Rooms
Freshly painted & renovated!

**Sheppard & Neilson**


**Malvern** **$699,900**
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!


**Simcoe St N/ Brittania Ave**

**Oshawa** **$770,000**
4 Beds • 3 Baths • 9 Rooms
Corner lot Just like Semi Townhouse

**McLevin Ave & Morningside**

**Malvern** **$880,000**
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement

**Townline Rd & Shankel Rd**

**Oshawa** **$999,900**
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407

**Sheppard Ave E / Neilson Rd**

**Scarborough** **$842,000**
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED

**Church St N & Rossland Rd W**


**Ajax** **$899,999**
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout

**Church St N & Rossland Rd W**

**Ajax** **$899,999**
3 Beds • 3 Baths • 6 Rooms
Upgraded Hardwood Floors

**Kellough St/ Mcneil St**

**Innisfil** **$1,295,000**
4+1 Beds • 5 Baths • 11+3 Rooms
Open concept, large eat-in kitchen

**Ninth Line/Donald Cousens**

**Markham** **$630,000**
2 Beds • 2 Baths • 4 Rooms
Minutes to Stouffville Hospital

**Mara & King**

**Beaverton** **$729,800**
4 Beds • 3 Baths • 9 Rooms
2300 Square Foot Home

**Finch Ave E/ Morningside Ave**
FOR LEASE

**Scarborough** **$2,500**
3+1 Beds • 3 Bath • 10+3 Rooms
Nicely Maintained And Cleaned

**Scarborough Golf/Lawrence Ave**
FOR LEASE

**Scarborough** **$1,900**
2 Beds • 1 Bath • 4 Rooms
Lovely Corner Bungalow

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இலங்கைத் தேர்தலின் திருப்புமுனையை கனடிய ஊடகங்கள் முக்கியத்துவம் வழங்கி இருக்க வேண்டும் - கனடிய தூதுவர் தெரிவிப்பு



இலங்கையில் 2024 நவம்பர் 14ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல்கள் தொடர்பில் கனேடிய ஊடகங்கள் முக்கியத்துவம் வழங்க வில்லை என்று இலங்கைக் கான முன்னாள் கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெக்கின்னன் தெரிவித்துள் ளார்.

சமூக ஊடகங்களில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அவர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார். அண்மைய நாட்களில் மற்ற அரசியல் நிகழ்வு களைப் பார்க்கும்போது, இலங்கை யின் நவம்பர் 14 நாடாளுமன்றத் தேர்தல்களின் நம்ப முடியாத முடிவு கள் கனடாவில் தலைப்புச் செய்தி களில் ஆதிக்கம் செலுத்தவில்லை என்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் ஏனைய காலங்களை காட்டிலும், முக்கியமான விடயங்கள் இடம் பெறும் போது கனேடிய ஊடகங்கள் இலங்கையை போன்ற நாடுகளின் செய்திகளுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும் என்று டேவிட் மெக்கின்னன் வலியுறுத்தியுள்ளார்.

பல காரணங்களுக்காக, இந்தியப் பெருங்கடல் தீவான இலங்கையை யார் இயக்குகிறார்கள் என்பது பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் முக்கியமானது. கொழும்பு தெற்கா சியாவின் பரபரப்பான துறைமுக மாகும். இது சீனா-இந்தியா மற்றும் அமெரிக்கா போட்டியின் மையமாக இருந்து வருகிறது.

அத்துடன் இலங்கை பல தசாப் தங்களாக இன பதற்றம், பிளவுபடு த்தும் அரசியல் மற்றும் மிருகத் தனமான மோதல்களை சர்வதேச நிகழ்ச்சி நிரல்களுக்குள் கொண்டுள் ளது.

இந்தநிலையில் கடந்த தேர்தலின் போது வாக்காளர்கள், பல தசாப்தங் களாக கொந்தளிப்புக்கு மத்தியில் நாட்டைக் கொண்டு சென்ற வம்ச அரசியல்வாதிகள், பாரம்பரிய உயரடுக் குகள் மற்றும் இனவெறி கொண்ட அரசியலுக்கு தங்கள் கூட்டுப் பின்ன டைவை ஏற்படுத்தியுள்ளனர்.

2022ல் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை ஆட்சியிலி ருந்து விரட்டியடித்த வெகுஜன ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து, தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு இடங் களைப் பெற்றுள்ளது.

ஏகே.டி என்று சொல்லப்படும் இலங் கையின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தோற்றம் ஒரு மார்க்சிஸ்டாக இருக்கலாம்,

ஆனால் இப்போது அவரை யாரும் பெரிதாக அவரை அவ்வாறு அழை ப்பதில்லை என்றும் மெக்கின்னன் குறிப்பிட்டுள்ளார். தமிழ் ஆதிக்கம் செலுத்தும் யாழ்ப்பாணத்திலும் கூட, தமிழ் கட்சிகளை முறியடித்து தேசிய மக்கள் சக்தி முன்னுக்கு வந்துள் ளது.

அதே வேளை நடந்து முடிந்த தேர்தலில் இனவாதச் செய்திகள் அல்லது அடிப்படைக் கருத்துக்கள் இல்லாதது குறித்து பலர் கருத்து தெரிவித்துள்ளனர். இதன்படி இன வாத அரசியல் தங்களுக்கு ஆர்வமாக இல்லை என்பதை இலங்கை வாக் காளார்கள் தெளிவுப்படுத்தியுள்ளனர் என்றார்.

# முக்கிய அமைச்சின் செயலாளரான தமிழர்



உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக தமிழரான ஏ.விமலேந்திர ராஜா நியமிக்கப்பட்டுள்ளார். இலங் கையில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் பெரும் வெற்றிபெற்று ஜனாதிபதி அனுர தலைமையிலான அரசாங்கம் அமைக்கபப்ட்டுள்ளது.

அமைச்சர்கள் நியமனத்தை தொடர் ந்து புதிய பிரதமரின் செயலாளர் அமைச்சரவை செயலாளர் உட்பட 16 அமைச்சகங்களுக்கு புதிய செய லாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் அமைச்சர் வசந்த சமரசிங்கவின் வர்த்தக,வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக தமிழரான ஏ.விமலேந்திர ராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் நிர்வாக சேவையில் அதி உயர் பதவிகளை வகித்த ஏ.விமலேந்திரராஜா யாழ் பல்கலைக் கழகத்தில் பொருளியல் துறையில் படித்தவர் ஆவார் இந்நிலையில் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத் தினால் குறிப்பாக ஊழலுக்கு எதிரான குரலாக விளங்கிய வசந்தவின் தலை மையிலான அமைச்சிற்கு தமிழரான ஏ.விமலேந்திரராஜா உள்வாங்கப்படுள் ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க கடந்த செவ்வாய்க்கிழமை தனது அமைச்சு அலுவலகத்தில் கடமைகளை செஞ் சேலை அணிந்து பொறுப்பெடுத்த அமைச்சர் சரோஜா போல்ராஜ் புத்த சிலைக்கு மெழுகுவர்த்தி ஏற்றி கடமையை ஆரம்பிப்பது என்.பி.பி. யின் குறைந்த பட்ச இடதுசாரித் தனம் குறித்து வியப்பை ஏற்படுத்து கிறது.

உங்களுக்கு சிறுபான்மை தேசிய இனங்கள் தங்கள் சமூக அடையாளங் களைதொலைத்து விட்டு இலங்கை யர் என்ற பௌத்த சிங்கள மாஜா ஜாலத்தில் கரையுங்கள் என்று கோரு வதற்கு ஒரு இடதுசாரி (?) அமை ப்பாக, ஆட்சியாக, அதிகார மைய மாக வெட்கமில்லையா என்று இப் போதே நடுநிலையாக சிந்திக்கின்ற மக்கள் கேட்கத் தொடங்கி விட்டனர்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# தனித்துப் போட்டியிட்ட தமிழரசுக்கட்சிக்கு வடக்கு கிழக்கு மக்கள் வழங்கிய ஆணை! பாராளுமன்றத்தில் 3வது பெரிய கட்சியாகியது!




தமிழரசுக் கட்சிக்கு வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் பிரதான ஆணையைக் கொடுத்திருக்கின்றார்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மக்கள் முன்பாக வந்து தேர்தலில் போட்டியிட்டு மக்களால் நான் தெரிவு செய்யப்படாத சூழலில் தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்றம் செல்வதை விரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்

யாழ். ஊடக அமையத்தில் 15 நவம்பர் 2024 நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

கட்சி தாவல்கள் நிறைந்த எங்களுடைய அரசியல் கலாசாரத்திலே தேசிய மக்கள் சக்தி தெட்டத் தெளிவாக வேற கட்சிகளில் இருந்து தங்களுடைய கட்சிக்கு யாரும் வர வேண்டாம் என்றும், தாங்கள் யாரையும் எடுக்க மாட்டோம் என்றும் சொல்லி தனித்து இந்த வெற்றியை ஈட்டியிருக்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்றதே வியப்பான விடயமாகப் பலராலும் நோக்கப்பட்டது. அதற்கு ஒருபடி மேலே சென்று இப்போது நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அப்பால் மிகப் பெரியதொரு பெரும்பான்மையை அவர்கள் பெற்றிருக்கின்றார்கள்.

இந்த இடத்திலே தேசிய மக்கள் சக்தி தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே மக்களுக்குச் சொன்ன விடயங்களை நாங்கள் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். இப்படியாக மக்கள் ஆணை உங்களுக்குக் கொடுக்கப்பட்டு இருப்பது முக்கியமாக தேர்தல் அறிக்கை விஞ்ஞாபனத்திலே தாங்கள் குறிப்பிட்ட வாக்குறுதிகளுக்காகவே தான். ஆகையினால் அதைச் செய்து நிறைவேற்றும்படியாகஇந்த ஆணை கொடுக்கப்பட்டும் இருக்கின்றது.

இந்தத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிட்டது எல்லோருக்கும் தெரியும். தமிழரசுக் கட்சியோடு இணைந்து வெவ்வேறு கட்சிகள் கூட்டுச் சேர்வதும் பின்னர் விலகிச் செல்வதும் வழக்கமாக இருந்திருக்கின்றது.

இந்தத் தேர்தலுக்கு முன்னர் எங்களோடு கூட்டுச் சேர்ந்திருந்த பங்காளிக் கட்சிகளான ரெலோவும் புளொட்டும் விலகி புதிதாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்று குத்துவிளக்குச் சின்னத்திலே அவர்கள் பயணித்தார்கள். இதற்குப் பின்னர் இப்போது இதனைச் சங்கு சின்னமாகா மாற்றியிருக்கின்றார்கள்.

ஆகையினால் தமிழரசுக் கட்சி தனித்து மக்கள் முன்பாக ஆணைக்காகச் செல்லுகின்ற போது பலருடைய விமர்சனங்கள் இருந்தன. அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்து விட்டது, தமிழரசுக் கட்சி சின்னாபின்னமாகி விட்டது, சுக்குநூறாகி விட்டது என்றவாறாக இந்தத் தேர்தல் காலத்தில் கூட சொல்லப்பட்டது. எங்களுடைய கட்சியில் இருந்தும் சிலர் விலகிச் சென்று வேறு கட்சிகளிலும், சுயேச்சைக் குழுக்களிலும் போட்டியிட்டிருக்கின்றார்கள்.


ஆனால் இந்தத் தேர்தல் முடிவு எங்களுடைய கட்சிக்குப் பலமான மக்கள் ஆணையைக் கொடுத்திருக்கின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பத்து ஆசனங்கள் இருந்த போதிலும் தமிழரசுக் கட்சிக்கு ஆறு ஆசனங்கள் தான் அதில் இருந்தன. இப்போது தனித்துப் போட்டியிடுகின்ற போது எங்களுக்கு எட்டு ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. எங்களை விட்டு விலகி தனித்துச் சென்றவர்களுக்கு எந்தவிதமான ஆணையையும் கொடுக்காமல் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் பிரதான ஆணையைக் கொடுத்திருக்கின்றார்கள்.

அதற்காகத் தமிழரசுக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். இந்தத் தேர்தல் பரப்புரை காலத்திலே நாங்கள் தெளிவாக ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டியிருந்தோம். அதாவது இணைந்த வடக்கு கிழக்கு எங்களது தாயகம், அதிலே எங்களுக்கு சுயநிர்ணய உரித்து உண்டு. நாங்கள் ஒரு மக்களாக - ஒரு தேசமாக அதிலே வாழுகின்றோம் என்பதை உறுதி செய்வதற்காக வடக்கு - கிழக்கு முழுவதும் ஒரு கட்சிப் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும் எனக் கேட்டிருந்தோம்.

அதுவும் தமிழரசுக் கட்சி தவிர்ந்த வேறு எந்தக் கட்சிகளுக்கும் அந்த ஆற்றல் இல்லை என்று மக்களுக்கு நாங்கள் தெளிவாகச் சொல்லியிருந்தோம். இன்று வெளியாகி இருக்கின்ற தேர்தல் முடிவுகளிலே அது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் (16ம் பக்கம் பார்க்க)




கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)
Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அனைத்து அம்பாள் அடியார்களிற்கும் வணக்கம்!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி — நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# 2 தமிழர்களை உள்ளடக்கிய புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம்!

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் புதிய அமைச்சர்கள் பதவிப் பிரணமாணம் செய்து கொண்டனர்.

முதலில் பிரதமராக ஹரிணி அமரசூரிய பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். தொடர்ந்து புதிதாக 21 அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.



அதற்கிணங்க பிரதமர் ஹரிணி அமரசூரிய — கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சராகவும், விஜித ஹேரத் வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சராகவும், சந்தன அபேரத்ன பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சராகவும் ஹர்ஷன நாணயக்கார நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சராகவும், சரோஜா சாவித்திரி போல்ராஜ் – மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சராகவும், லால் காந்த கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பாசன அமைச்சராகவும், அநுர கருணாதிலக நகர அபிவிருத்தி, கட்டட நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சராகவும், ராமலிங்கம் சந்திரசேகரம் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சராகவும்,

உபாலி பன்னிலகே கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராகவும், சுனில் ஹந்துன்னெத்தி கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அமைச்சராகவும், ஆனந்த விஜேபால பொதுமக்கள் பாதுகாப்பு, பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சராகவும், பிமல் ரத்னாயக்க போக்குவரத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், சிவில் விமான சேவைகள் அமைச்சராகவும், ஹினிதும சுனில் செனவி புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சராகவும்,

நலிந்த ஜயதிஸ்ஸ சுகாதாரம், வெகுசன ஊடக அமைச்சராகவும், சமந்த வித்யாரத்ன பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சராகவும், சுனில் குமார கமகே இளைஞர் விவகாரம், விளையாட்டு அமைச்சராகவும், வசந்த சமரசிங்க வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சராகவும், கிருஷாந்த சில்வா அபேசேன விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்துறை அமைச்சராகவும்

அனில் ஜயந்த பெர்னாண்டோ தொழில்துறை அமைச்சராகவும் குமார ஜயகொடி வலுசக்தி அமைச்சராகவும் தம்மிக்க பட்டபெந்தி சுற்றாடல்துறை அமைச்சராகவும், இதேவேளை பாதுகாப்பு, நிதி ,பொருளாதார அபிவிருத்தி மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் என்பன ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

# பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்மக்கள் பரந்துபட்ட அளவில் சிந்திப்பதைக் காட்டுகின்றது - சீனத் தூதுவர் தெரிவிப்பு




அண்மையில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ் சமூகம் சரியான முடிவை எடுத்திருக்கின்றது. யாழ் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றிருப்பது தமிழ் மக்கள் பரந்துபட்ட அளவில் சிந்திப்பதை காட்டுகிறது. இது இனங்களிடையே ஒற்றுமையும் பன்மைத்துவத்தையும் ஏற்படுத்தும் ஒரு குறியீடு என இலங்கைக்கான சீன தூதுவர் கீ.ஷென்ஹொங் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் 19 நவம்பர் 2024 செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

இலங்கை சீனாவின் நீண்டகால நண்பனாக இருக்கிறது. இலங்கை அரசாங்கம் எடுக்கும் சகல முடிவுகளையும் இலங்கை மதிக்கிறது. இந்தியா இலங்கையின் மிக நெருக்கமான அயல் நாடாக இருக்கிறது. அதனால் இந்தியா மற்றும் இலங்கை பொருளாதார ரீதியான உறவு வலுப்படுவதை நாம் விரும்புகிறோம். டிசம்பர் மாத இறுதியில் அனுர குமார திஸாநாயக்க இந்தியா பயணிக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது மிகவும் சந்தோசமான விடயம். அதன் பின்னர் பொருத்தமான தருணத்தில் இலங்கை ஜனாதிபதி சீனாவுக்கு வருகை தரலாம். சீனா மற்றும் இலங்கை இடையே பொருளாதார ரீதியான உறவு வலுப்படுவதையே நாம் விரும்புகிறோம்.

வடபகுதியில் பல்வேறு வகையான வேலைத்திட்டங்களை நாம் கொரோனா காலத்தில் இருந்து மேற் கொண்டு வருகிறோம். சினோபாம் தடுப்பூசி, உலர் உணவு பொருட்கள், மீன் வலை என பல உதவிகள் செய்யப் பட்டது. வடபகுதி மக்களுடன் நல் உறவை மேம்படுத்தவே விரும்புகிறோம் என்றார்.

# 19 வைத்தியர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு அதில் 4 பேர் வடக்கு கிழக்குத் தமிழர்கள்

2024 பாராளுமன்ற தேர்தலில் முதற்தடவையாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து 4 தமிழ் வைத்தியர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள அதேவேளை, இவ்வாண்டு 19 வைத்தியர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.



இதனடிப்படையில் தமிழரசுக் கட்சியின் சார்பில் மட்டக்களப்பைச் சேர்ந்த டாக்டர் இளையதம்பி சிறிநாத், வவுனியாவைச் சேர்ந்த டாக்டர் ப.சத்தியலிங்கம், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ்.சிறி பவானந்தராஜா, சுயேட்சைக்குழு சார்பில் போட்டியிட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராமநாதன் அர்ச்சுனா போன்றோர் தெரிவாகியுள்ளார்கள். அதேபோல் அனைத்து மாவட்ட ங்களிலிருந்தும் மொத்தமாக 19 வைத்தியர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இதேவேளை சுமார் ஒரு இலட்சம் தனியார்துறை ஊழியர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் மதிப்பிட்டுள்ளனர். விடுமுறை எடுக்க முடியாமல் அவர்கள் வாக்களிப்பதை தவிர்த்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# பிரமாண்டமான பெரும்பான்மையின் உட்கிடையான ஆபத்து

பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பிரமாண்டமான வெற்றியைப் பெற்று வரலாறு படைத்திருக்கிறது. 1977ஜூலை பாராளுமன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் ஐக்கிய தேசிய கட்சி அன்றைய பாராளுமன்றத்தின் 169 தொகுதிகளில் 144 தொகுதிகளை கைப்பற்றி ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பலத்தை பெற்ற பிறகு மீண்டும் அத்தகைய ஒரு பிரமாண்டமான வெற்றியை முதல் தடவையாக இலங்கை கண்டிருக்கிறது.

தொகுதி அடிப்படையிலான தேர்தல் முறையிலேயே அன்று ஐக்கிய தேசியக் கட்சி சாதனையைப் படைத்தது. ஆனால், விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை முழுமையாக எந்தவொரு கட்சியுமே இதுவரை பெற்றிராத நிலையில் இந்தத் தடவை பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சாதித்துக் காட்டியிருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் அரசியல்வாதிகளின் அனுபவக் குறைவு, பாராளுமன்ற விவகாரங்களை கையாள்வதற்கான அறிவின்மை பற்றியெல்லாம் எதிரணியினர் முன்வைத்த கருத்துக்களை பொருட்படுத்தாமல் நாட்டு மக்கள் ஜனாதிபதி திஸநாயக்க தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக பலம்பொருந்திய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான தெளிவான ஆணையை மக்கள் வழங்கியிருக்கிறார்கள்.

பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களின் தொடக்கத்தில் ஜனாதிபதியும் அமைச்சர் விஜித ஹேரத்தும் பாராளுமன்றத்தை தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களால் நிரப்புமாறும் எதிர்க்கட்சியே தேவையில்லை என்றும் மக்களிடம் கூறினார்கள். ஆனால் அதற்கு கிளம்பிய எதிர்ப்பை அடுத்து அவர்கள் இருவரும் அந்தக் கருத்துக்களை பிறகு தவிர்த்து வந்த நிலையில் தேசிய மக்கள் சக்தியின் குறிப்பாக, ஜே. வி.பியின் தலைவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொண்டிருந்த அரசாங்கங்கள் எதேச்சாதிகாரத்தனமாக நடந்து அதிகார துஸ்பிரயோகங்களை செய்ததை சுட்டிக்காட்டி தங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டாம், ஒழுங்காக அரசாங்கத்தை நடத்துவதற்கு உறுதியான ஒரு பாராளுமன்ற பெரும்பான்மையை தருமாறு மக்களை கேட்டுக் கொண்டார்கள்.

அவர்கள் அவ்வாறு கேட்டுக் கொண்டதையும் பொருட்படுத்தாமல் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேலதிகமாக 19 ஆசனங்களுடனான ஆணையை கொடுத்திருக்கிறார்கள். உறுதியான அரசாங்கத்தை அமைப்பதற்கு மக்கள் தங்களுக்கு ஒரு பாராளுமன்ற பெரும்பான்மையைத் தருவார்கள் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் எதிர்பார்த்திருந்தாலும் இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரமாண்டமான ஒரு பெரும்பான்மையை தருவார்கள் என்று நிச்சயமாக நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்.

அத்தகைய பெரும்பான்மை பலம் தங்களுக்கு கிடைத்திருப்பது குறித்து ஜனாதிபதியும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களும் பெருமைப் பட்டாலும் அதில் உட்கிடையாக இருக்கும் ஆபத்தையும் புரிந்து கொள்ளக் கூடியவர்களாக அவர்கள் இருப்பார்கள் என்று நம்புகிறோம். பெரிய எதிர்பார்ப்புடன் தங்களை ஆட்சியதிகாரத்துக்குக் கொண்டு வந்திருக்கும் மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் நிறைவேற்றுவதில் தங்களுக்கு இருக்கும் தலையாய பொறுப்பை உணர்ந்தவர்களாக ஜனாதிபதியும் அமையவிருக்கும் புதிய அரசாங்கமும் நடந்து கொள்ளவேண்டும் என்று நாம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறோம்.

# தமிழ்த்தேசியப் போராட்டம் தொடரும்! அதில் மாற்றமில்லை! -சாணக்கியன்



தமிழ் மக்களுடைய தமிழ் தேசிய போராட்டம் தொடரும் அதில் மாற்றமில்லை வெற்றி பெற்ற பின்னர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியானது இலங்கையிலேயே மூன்றாவது அதிகூடிய ஆசனங்களை பெற்ற கட்சியாகும். அந்த வகையிலே தமிழ் மக்களுடைய தமிழ் தேசிய போராட்டம் தொடரும் அதில் மாற்றமில்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சியில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பெறுபேறு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அவரது களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள வீட்டிற்குச் சென்றபோது அங்கு அவரை வரவேற்பதற்காக குழுமியிருந்த நூற்றுக் கணக்கான மக்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள அவரது பாட்டனார் சீ.மூ.இராசமாணிக்கம் சிலைக்கு மலர் மாலை அவர் அணிவித்ததைத் தொடர்ந்து குழுமியிருந்த ஆதரவாளர்களால் பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டார். இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்.

இது என்னுடைய வெற்றி அல்ல ஒட்டு மொத்த வடக்கு கிழக்கு மக்களுடைய வெற்றியாகும் நாடு முழுவதும் திசைகாட்டிக்கு சின்னத்துக்கும் அனுரகுமார திசாநாயக்க அவர்களுக்கும் இருக்கும் பொழுது மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகூடிய விருப்பு வாக்குகளை மட்டக்களப்பு வாழ் மக்கள் எனக்கு தந்திருக்கிறார்கள் வடக்கு கிழக்கு முழுவதற்கும் இது ஒரு செய்தியாகும். வடகிழக்கிலே உள்ள எட்டு மாவட்டங்களில் தமிழ் பிரதிநிதித்துவம் கிடைத்த கட்சி இலங்கை தமிழரசி கட்சி மாத்திரம் தான். எங்களுடைய கட்சி தற்பொழுதும் இலங்கையிலேயே தமிழ் மக்களுடைய பிரதானமான கட்சியாகும். இலங்கையிலேயே மூன்றாவது அதிகூடிய ஆசனங்களை பெற்ற கட்சியுமாகும். அந்த வகையிலே தமிழ் மக்களுடைய தமிழ் தேசிய போராட்டம் தொடரும் அதில் மாற்றமில்லை.

நாங்கள் எவருக்கும் எதிரானவர்கள் அல்ல. அனைவரையும் இணைத்துத் தான். நாங்கள் இந்த மாவட்டத்திற்கும் இந்த வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கும் சிறந்த ஒரு எதிர் காலத்தை அமைத்துக் கொடுப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் 10வது பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக்கட்சி 3வது பலமிக்க அரசியல் கட்சியாக உருவாகியுள்ளது!

இலங்கையின் 10 ஆவது பாராளுமன்றத் தேர்தலில் 8 ஆசனங்களைக் கைப்பற்றியதன் மூலம் இலங்கையின் 3ஆவது பலமிக்க அரசியல் கட்சி என்ற இடத்தி இலங்கை தமிழரசுக்கட்சி பிடித்துள்ளது.

நடை பெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான தேசியமக்கள் சக்தி 68,63,186 வாக்குகளை பெற்று 141 நேரடி ஆசனங்கள் 18 தேசிய பட்டியல் ஆசனங்கள் என 159 ஆசனங்களைக் கைப்பற்றி மூன்றி இரண்டு பெரும்பான்மை பலத்தை நிலைநாட்டியுள்ளது

அதற்கு அடுத்தாக ஐக்கிய மக்கள் சக்தி 19,68,716 வாக்குகளை பெற்று 35நேரடி ஆசனங்கள்,5 தேசியப் பட்டியல் ஆசனங்கள் என 40 ஆசனங்களைக் ஆசனங்களை கைப்பற்றி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளதுடன் எதிர்கட்சியாகவும் உருவாகியுள்ளது.

மூன்றாம் இடத்தில் இலங்கை தமிழரசு கட்சி 2,57,813 வாக்குகளை பெற்று மட்டக்களப்பில் 3 ஆசனங்களையும், அம்பாறையில் 1 ஆசனத்தையும், திருகோணமலையில் 1 ஆசனத்தையும், வன்னியில் 1 ஆசனத்தையும், யாழ்ப்பாணத்தில் 1 ஆசனத்தையும் என 7 நேரடி ஆசனங்கள் .இ தேசியப்பட்டியல் ஆசனம் என 8 ஆசனங்களைக் கைப்பற்றி 3 ஆவது பலமிக்க அரசியல் கட்சியாக உருவாகியுள்ளது.

இதேவேளை புதிய ஜனநாயக முன்னணி 5 ஆசனங்களையும் கடந்த முறை 145 ஆசனங்களை கைப்பற்றி ஆட்சி புரிந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 3 ஆசனங்களையும் முஸ்லிமும் காங்கிரஸ் 3 ஆசனங்களையும் ஐக்கிய தேசிய கட்சி 1 ஆசனத்தையும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி 1 ஆசனத்தையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 1 ஆசனத்தையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 1 ஆசனத்தையும் சுயேச்சை குழு 17 ஒரு ஆசனத்தையும் இலங்கைத் தொழிலாளர் கட்சி 1 ஆசனத்தையும் சர்வஜன அதிகாரம் கட்சி 1 ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போறற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# தமிழர்கள் புறக்கணிக்கப்படுவதாக ஜெனிவாவில் இனி கேள்வி எழுப்ப முடியாது- சட்டத்தரணி பிரதீபா மஹாநாம



வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். அரசியல் கட்டமைப்பில் இருந்து தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று ஜெனிவாவில் இனி கேள்வியெழுப்ப முடியாது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என சட்டத்தரணி பிரதீபா மஹாநாம தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது

பொதுத் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி 21 தேர்தல் மாவட்டங்களிலும் அமோக வெற்றிப் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் பாரம்பரியமான அரசியல் கலாச்சாரத்தில் இருந்து விலகி புதிய அரசியல் கலாச்சாரத்துக்குள் பிரவேசித்துள்ளார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் குறிப்பாக தமிழ் மக்கள் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். எவ்விதமான அரசியல் கூட்டணியுமில்லாமல் தேசிய மக்கள் சக்தி வெற்றிப் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பொது அரசியல் கட்டமைப்பில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவே கடந்த காலங்களில் சர்வதேச மட்டத்திலும், சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் தொடர்ச்சியாக குறிப்பிட்டது.

இந்த விடயங்களை முன்னிலைப்படுத்தி இலங்கைக்கு எதிரான பிரேரணைகளும் முன்வைக்கப்பட்டன. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் குறிப்பாக தமிழ் மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். ஆகவே பொது அரசியல் கட்டமைப்பில் இருந்து தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்று இனி ஜெனிவாவில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடர் 2025 பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் புதிய அரசியல் கட்டமைப்புக்குள் பிரவேசித்துள்ளார்கள். பழைய பாரம்பரியமான அரசியல் கட்டமைப்பை புறக்கணித்துள்ளார்கள் என்ற செய்தியை அரசாங்கம் சர்வதேச அரங்கில் எடுத்துரைக்க வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் எவ்விதமான எதிர்பார்ப்பு மற்றும் நிபந்தனைகளின்றி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு ஆதரவளித்துள்ளார்கள். ஆகவே தமிழர்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி நாட்டின் சட்ட கட்டமைப்புக்குள் இருந்துக் கொண்டு தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும். அத்துடன் நாட்டில் மனித உரிமையை மென்மேலும் வலுப்படுத்த பாராளுமன்ற பொறிமுறைக்குள் விசேட செயற் திட்டங்களை வகுக்க வேண்டும் என்றார்.

# அநுர அரசாங்கத்திற்கு நாம் எதிரானவர்கள் அல்ல! தமிழரசுக்கட்சியின் துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்



நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிரானவர்கள் அல்லது எதிர்ப்பானவர்கள் அல்லர் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமது அலுவலகத்தில் கடந்த 16 நவம்பர் 2024 நடாத்திய ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் .மேலும் தெரிவிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தமிழரசுக் கட்சி இருந்த போது நாங்கள் ஆறு ஆசனங்களைப் பெற்றிருந்தோம்.

ஆனால் இப்போது தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிட்டு எட்டு ஆசனங்களை அதுவும் பல்வேறு தரப்பினரின் எதிர்புகளுக்கு மத்தியில் பெற்றிருக்கின்றது. எங்கள் கட்சிக்கு வாக்களித்த அத்தனை மக்களுக்கும் அதே போல் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு வாழ்த்துக்களையும் கூறிக் கொள்கின்றோம்.

எமது மக்களுடைய உரிமை சார்ந்த எமது பயணம் தொடரும். இதேவேளை தேசிய மக்கள் சக்தி அலையாக அல்லது சுனாமியாக இந்த முறை வெற்றியைப் பதிவு செய்திருக்கின்றது. இந்தக் கட்சி மூன்றில் இரண்டிக்கும் மேற்பட்ட பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருக்கின்றது. இந்தக் கட்சியில் யாழ்ப்பாணத்திலும் ஏனைய இடங்களிலும் சிலர் தெரிவு செய்யப்பட்டும் உள்ளனர்.ஆகவே நாங்கள் கட்சி சார்ந்து அல்லது கொள்கை சார்ந்து சொல்லக்கூடிய விடயம் என்னவென்றால் அநுர தரப்பினர் முன்னைய காலத்தில் 13 ஆவது திருத்தத்துக்கும் மாகாண சபை முறைமைக்கு எதிராகவும் போராடியவர்கள்.

ஆனால் இப்போது தமிழ் மக்கள் அதனை விரும்புவதாலும் புதிய அரசமைப்பைக் கொண்டு வரவுள்ளதாலும் அந்த முறைமை அப்படியே இருக்கட்டும் என்றவாறான மாற்றமொன்று அவர்களிடத்தே ஏற்பட்டிருக்கின்றது. நாங்கள் கேட்பது எங்கள் இனத்துவ அடையாளத்தை எங்களது தாயகத்தில் பேணிக் கொண்டு எங்களுடைய கருமங்களை நாங்களே நிர்வகிக்கக் கூடிய ஒரு கட்டமைப்பைத்தான் நாங்கள் கோரி நிற்கின்றோம்.

இந்த விடயத்தை உங்களுக்குச் சமர்ப்பித்து ஏற்கனவே மாகாண சபை விடயத்தை நீங்கள் மீளாய்வு செய்தது போல எங்களுடைய இந்தக் கோரிக்கையையும் மீளாய்வு செய்து தீர்வுகளை வழங்க வேண்டும். இப்போது உங்களுக்கு இருக்கின்ற ஆட்சிப்பலம் ஆதரவு பலம் மக்கள் பலம் என எல்லாப் பலத்தையும் பயன்படுத்திக் கொண்டு மக்கள் ஆணையைப் பெற்ற நீங்கள் உங்கள் கொள்கையை மீளாய்வு செய்து தமிழ் மக்களையும் அனைத்துச் செல்லக் கூடியதாகப் பயணம் அமைய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா 23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை சங்கீத
சங்கமம் 2025 விபரங்களுக்கு:- 416 841 9600

# தமிழரசின் எதிர்காலமும்
## சுமந்திரன் - ஸ்ரீதரன் பொறுப்பும்

வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் இருந்து இந்தத் தடவை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்களில் தனியொரு கட்சியைச் சேர்ந்த கூடுதல் எண்ணிக்கையானவர்கள் என்றால் அவர்கள் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களே.

தேசிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் முன்னரும் இரு மாகாணங்களில் இருந்தும் பாராளுமன்றத்துக்கு தெரிவாகினார்கள். ஆனால், இந்த தடவை நடந்திருப்பதைப் போன்று ஒரு தேசிய கட்சி அதுவும் ஓர் இடதுசாரிக் கட்சி தமிழ்பேசும் மக்களை பாரம்பரியமாக பிரதிநிதித்துவம் செய்து வந்த அரசியல் கட்சிகளை இவ்வாறாக தோற்கடித்ததில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஆறு பாராளுமன்ற ஆசனங்களில் மூன்று ஆசனங்களை கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியவாத கட்சிகளினால் ஒவ்வோர் ஆசனத்துக்கும் மேல் பெறமுடியாமல் போகிற அளவுக்கு அவற்றை பின் தள்ளியிருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தை தவிர ஏனைய நான்கு மாவட்டங்களிலும் கூடுதல் ஆசனங்களைக் கைப்பற்றிய முன்னிலைக் கட்சியாக தேசிய மக்கள் சக்தி சாதனை படைத்திருக்கிறது. இந்த அரசியல் கோல மாற்றத்துக்கு உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் தமிழ்க்கட்சிகளின் செயல்பாடுகளில் மக்களுக்கு ஏற்பட்ட விரக்தியும் வெறுப்பும் காரணமா அல்லது ஜனாதிபதி திஸநாயக்கவினதும் அவரது கட்சியினதும் கொள்கைகள் மீதான ஈர்ப்பு காரணமா? தமிழ் மக்கள் வாக்களித்த முறையை தமிழ்க் கட்சிகளும் தேசிய மக்கள் சக்தியும் எவ்வாறு வியாக்கியானப்படுத்துகின்றன என்பது அறிந்து கொள்ளவேண்டிய முக்கியமான விடயமாகும்.

இரு மாகாணங்களிலும் தங்களுக்கு எட்டு ஆசனங்கள் கிடைத்தமை ஒரு வெற்றியாக இலங்கை தமிழ் அரசு கட்சியின் சில தலைவர்கள் பெருமைப்படுகிறார்கள். முன்னைய பாராளுமன்றத்தில் தங்களுக்கு இருந்த ஆறு ஆசனங்களையும் விட இரு ஆசனங்களை கூடுலாக தந்து தமிழ் மக்கள் தங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான அரசியல் இயக்கமாக மீண்டும் அங்கீகாரத்தை வழங்கியிருப்பதாகவும் அந்த தலைவர்கள் தர்க்க நியாயம் செய்கிறார்கள். ஆனால், தமிழ் அரசுக் கட்சி பெற்றிருக்கும் ஆசனங்களின் எண்ணிக்கை குறித்து பெருமைப்படுவதையும் விட தேசிய மக்கள் சக்தியினால் இரு மாகாணங்களிலும் தமிழ்க் கட்சிகளை பின்தள்ளி எவ்வாறு கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றக்கூடியதாக இருந்தது என்பதை பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டியதே முக்கியமானதாகும்.

கடந்த காலம் குறித்து சுய பரிசோதனை செய்வதில் ஒரு போதும் அக்கறை காட்டாத தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தற்போதைய நிலைவரம் குறித்தாவது ஆழ்ந்து சிந்திப்பார்கள் என்று எதிர்பார்ப்பது கஷ்டமாக இருக்கிறது. இது இவ்வாறிருக்க, வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை பாராளுமன்றத்தில் பிரதி நிதித்துவம் செய்யும் பிரதான அரசியல் கட்சியாக எட்டு ஆசனங்களுடன் என்றாலும் விளங்கும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்கள் அதன் எதிர்காலம் குறித்து ஆழமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் அரசுக் கட்சி அதன் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத அளவுக்கு உட்பூசல்களினால் சீர்குலைந்து கிடக்கிறது. பாரம்பரியமாக அதன் கோட்டையாக விளக்கிய யாழ்ப்பாண மாவட்டமே கைவிட்டுப் போயிருக்கிறது.

இவ்வருட முற்பகுதியில் திருகோணமலையில் நடை பெற்ற தலைவர் தேர்தலுக்கு பிறகு கட்சி உள்ளுக்குள் எத்தனை முகாம்களாக இருக்கிறதோ தெரியாது. ஆனால் வெளிப் படையாக இரு முகாம்களாக பிளவுபட்டு நிற்கிறது. கடந்த பதினைந்து வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து வந்த மதியாபரணம் சுமந்திரனும் சிவஞானம் சிறீதரனுமே அந்த எதிரெதிர் முகாம்களின் 'தளபதிகள்'. சுமந்திரனால் இந்த தடவை பாராளுமன்றத்துக்கு தெரிவாக முடியவில்லை.

அதேவேளை அவர் தெரிவாகாமல் போனதும் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினராக கூடுதல் விருப்பு வாக்குகளுடன் தான் தெரிவானதும் இன்றைய தமிழர் அரசியலின் கோலங்களுக்கு மத்தியில் சிறிதரன் பெரிதாகப் பெருமைப்படக் கூடிய அம்சங்கள் அல்ல. தமிழ் அரசு கட்சிக்குள் நிலவும் (22ம்பக்கம் பார்க்க)

# தெற்கு அரசியல் கட்சி ஒன்று வடக்கின் நம்பிக்கையை வெற்றி கொண்டுள்ளமைக்கு ஐ.தே.க தவிசாளர் பாராட்டு

ஜனாதிபதி உள்ளிட்ட இந்த அரசாங்கம் மக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய பல எதிர்பார்ப்புக்கள் இருக்கின்றன. அதனை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதை நாங்கள் பார்த்துக் கொண்டிருப்போம். என்றாலும் இந்த தேர்தல் மூலம் தெற்கு அரசியல் கட்சி ஒன்று வடக்கின் நம்பிக்கையை வெற்றி கொண்டுள்ளமை தொடர்பில் எமது பாராட்டை தெரிவித்துக் கொள்கிறோம் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் அமைந்துள்ள ஐக்கிய தேசிய கட்சி காரியாலயத்தில் 15 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் வரலாற்று வெற்றியை பெறுள்ளது. அதுதொடர்பில் நாங்கள் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். அதே போன்று இது இலங்கைக்கு விசேட சந்தர்ப்பமாகும். இலங்கை வரலாற்றில் ஒரு போது எமக்கு நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போன விடயமொன்றை தற்போதை ஜனாதிபதியும் அதிகாரத்துக்கு வந்துள்ள அரசாங்கமும் வெற்றி வெற்றுள்ளது. அது தொடர்பில் இலங்கையர்கள் என்ற வகையில் நாங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

உதாரணமாக சுதந்திரத்துக்கு பின்னர் டி.எஸ். சேனாநாயக்கவுக்கு பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ் தலைவர்கள் அமைச்சரவையில் பிரதிநிதுத்துவப்படுத்தினாலும் அந்த பிரதிநிதித்துவப்படுத்திய அமைச்சரவையில் தமிழ் தலைவர்கள் அவர்களுக்குரிய கட்சிகளில் வெற்றி பெற்று பிரதிநிதித்துவம் செய்தே வந்துள்ளது. அதாவது கடந்த அரசாங்கத்தில் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் பிரதிநித்தும் செய்தாலும் தெற்கு அரசியல் கட்சி ஒன்றை பிரதிநித்துவப்படுத்தி அமைச்சரவையில் செயற்படவில்லை. அதனால் தான் இது



விசேட சந்தர்ப்பம் என தெரிவித்தேன். தெற்கு அரசியல் கட்சி ஒன்றை பிரதிநிதித்துவம் செய்து வடக்கு, கிழக்கில் பல்வேறு அரசியல் கட்சிகள் பல்வேறு சக்திகளுடன் செயற்பட்டு வரும்போது. தெற்கில் ஒரு அரசியல் கட்சி தொடர்பில் நம்பிக்கை வைத்து விசேட வெற்றியை பெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் போது அவர்களும் அமைச்சரவையின் உறுப்பினர்களாக வருவார்கள். அதனை இலங்கையர்களாக பெற்றுக் கொண்ட வெற்றியாகவே நாங்கள் பார்க்கிறோம்.

# உண்மையான நல்லிணக்கத்தை அடைவதற்கு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்



தமிழ்க் கட்சிகள் தனித்துப் போட்டியிட்ட பொதுத் தேர்தலில் வரலாற்றில் முதல் தடவையாக யாழ்ப்பாண மக்கள் தென்னிலங்கையை அடிப்படையாகக் கொண்ட தேசியக் கட்சிக்கு வாக்களித்துள்ளனர். இந்தத் தருணம் தேர்தல் முடிவுகளில் மாத்திரமின்றி, முழு நாட்டினதும் ஒற்றுமையை வெளிப்படுத்துவதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்துள்ள பதிவிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட வேறுபாடுகளை விட உண்மையான வேறுபாடுகள் எப்போதுமே அரசியல் சார்ந்தவை என்பதை இந்த தேர்தல் முடிவுகள் எமக்கு நினைவுட்டுகின்றன. மேலும் இந்த மாற்றமானது மக்கள் பிளவுகளுக்கு அப்பால் செல்ல தயாராக இருப்பதைக் காட்டுகிறது. ஒன்றாக, நீடித்த நம்பிக்கையை உருவாக்கவும் உண்மையான நல்லிணக்கத்தை அடையவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த புதிய ஐக்கியத்தில் இலங்கை செழிக்கட்டும். மேலும் அனைத்து இலங்கையர்களின் நலனுக்காகவும் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க சேவையாற்றுவர் என்று நம்புகின்றோம் என அலி சப்ரி தனது பதிவில் மேலும் தெரிவித்துள்ளார்.





வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Give you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# திசை காட்டுமா திசை காட்டி?

– நிலாந்தன் –

அனுரா எளிமையானவர்தான். சாதாரண சனங்கள் தொட்டுக் கதைக்கக்கூடிய ஒரு ஜனாதிபதியும் தான். அவர் நாடாளுமன்ற தேர்தல் பிரச்சாரத்துக்காக கடந்த வாரம் பாசையூருக்கு வந்த பொழுது பாதுகாப்பு கெடுபிடிகள் இருக்கவில்லை. சீருடை அணிந்த படையினரின் பிரசன்னம் மிகக் குறைவாகவே இருந்தது. பதிலாக மாறுவேடத்தில் உலாவும் புலனாய்வுத் துறையினர் அதிகமாகக் காணப்பட்டார்கள். அனுர ஒரு காரில் வந்து இறங்கினார். அவர் அங்கிருந்த பௌத்த பிக்குகளின் காலில் விழுந்தார். ஏனைய மதகுருமார்களின் காலில் விழவில்லை என்றெல்லாம் குற்றச்சாட்டுகள் உண்டு.

ஆனால் அவரை வரவேற்ற முதிய அருட் சகோதரி ஒருவர் அவருடைய இரண்டு கன்னங்களையும் தடவி ஆசீர்வதித்தார். இந்து மதகுரு ஒருவர் வாரி அணைத்து முத்தமிட்டு ஆசிர்வதித்தார். அவ்வாறெல்லாம் தொட்டுப் பழகக்கூடிய அளவுக்கு அனுர எளிமையானவராக, எளிதில் கிடைக்கக் கூடியவராக, அணுகப்படக் கூடியவராகக் காணப்படுகிறார். இவையெல்லாம் மாற்றங்கள் தான். சந்தேகமே இல்லை. மேட்டுக்குடி ஜனாதிபதிகளின் மத்தியில் சாதாரண மக்களால் தொட்டுப் பழகக்கூடிய ஒருவர் ஜனாதிபதியாக வந்திருக்கிறார். நிச்சயமாக மாற்றம் தான். ஆனால் தமிழ் மக்கள் கேட்பது இந்த மாற்றத்தை மட்டுமல்ல.

தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் அதை விட ஆழமானது. அது இலங்கைத்தீவின் அரசுக் கட்டமைப்பில் ஏற்பட வேண்டிய மாற்றம். இப்போது இருக்கும் ஒற்றையாட்சிக் கட்டமைப்பை நீக்கி கூட்டாட்சிக் கட்டமைப்பு ஒன்றைக் கொண்டு வர வேண்டும். அந்தக் கட்டமைப்புக்குள் தமிழ் மக்கள் இறைமையும் சுய நிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக, தேசமாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இந்த மாற்றத்தைச் செய்யத் தேவையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை இப்பொழுது அவரிடம் உண்டு. எனவே இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கான கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்களுக்கு அவர் போக வேண்டும். போவாரா?

உயர் பாதுகாப்பு வலையத்தில் உள்ள பாதைகளைத் திறப்பது பிரதான சாலைகளில் உள்ள சோதனைச் சாவடிகளை அகற்றுவது குறிப்பாக, மன்னார்தீவின் நுழைவாயிலில் காணப்பட்ட சோதனை சாவடியை அகற்றியது யாழ்ப்பாணத்தில் மண்டைதீவு, புங்குடுதீவு ஆகிய இடங்களில் நுழைவாயிலில் காணப்பட்ட சோதனைச் சாவடிகளை அகற்றியமை.. போன்றவை மாற்றங்கள் தான்.

ஆனால் அதே மாற்றங்கள் முல்லைத் தீவின் உட்புறங்களுக்கு அல்லது கிழக்கின் உட்புறக கிராமங்களுக்குப் போகவில்லை என்பதையும் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். அங்கெல்லாம் சோதனைச் சாவடிகள் அகற்றப்படவில்லை. சில இடங்களில் வீதித் தடைகள் அகற்றப்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள் யாவும் தேர்தலுக்கு முன் செய்யப்பட்டவை. அதாவது தேர்தலை நோக்கமாகக் கொண்டவை.

சோதனைச் சாவடிகளையும் வீதித் தடைகளையும் அகற்றினால் மட்டும் போதாது. உயர் பாதுகாப்பு வலையங்களை அகற்ற வேண்டும். உயர் பாதுகாப்பு வலையங்களை அகற்றுவது என்பது இராணுவ மயப்பட்டிருக்கும் வடக்குக் கிழக்கில் இருந்து படையினரை விலக்கிக் கொள்வதைக் குறிக்கும்.

அவ்வாறு படையினரை விலக்கிக் கொள்வதென்றால் படையினரின் ஆட்தொகையைக் குறைக்க வேண்டியிருக்கும். படையினரின் ஆட் தொகையைக் குறைப்பது பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு முக்கியமான முன் நிபந்தனைகளில் ஒன்று.

ஆனால் அது தனிய பொருளாதாரத்தோடு மட்டும் சம்பந்தப்படவில்லை. அது நாட்டின் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளோடு சம்பந்தப்பட்டது. பாதுகாப்பு என்று இங்கு கருதப்படுவது, தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வரக் கூடிய அச்சுறுத்தல்களுக்கு எதிரான பாதுகாப்பு என்பதுதான் உண்மை. பயங்கரவாதத் தடைச் சட்டமும் அத்தகையது தான்.

தமிழ் மக்களின் அரசியலை பயங்கரவாதமாகப் பார்ப்பது. அதாவது இந்த விவகாரங்கள் யாவும் ஒரே மூல காரணத்தில் வந்து முடிகின்றன. அது என்னவெனில், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற விடயத்தில் தனக்கு முன் இருந்த எல்லாச் சிங்களத் தலைவர்களையும் விட அனுர மாறுபட்டுச் சிந்திப்பாரா?



அல்லது அதே பழைய மகாவம்ச மனோநிலையின் கைதியாக இருந்து சிந்திப்பாரா?

அவர் இப்பொழுது அரசுத் தலைவர். அதை இன்னும் ஆழமான வார்த்தைகளிற் சொன்னால், சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் தலைவர். சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு என்பது ஒற்றையாட்சிக் கட்டமைப்புத்தான். அது ஓரினத்தன்மை மிக்கது. பல்லினத் தன்மைக்கு எதிரானது. இலங்கைத் தீவின் பல்லினச் சூழலை ஏற்றுக் கொள்ளாத ஒரு கட்டமைப்பு. அந்தக் கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு அந்தக் கட்டமைப்பை மாற்ற அனுரவால் முடியுமா?

அவரிடம் இப்பொழுது உள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மை அந்த மாற்றங்களைச் செய்யப் போதுமானது. ஆனால் இங்கே பிரச்சனை, மூன்றில் இரண்டு பெரும்பான்மை மட்டுமல்ல. இதை இன்னும் ஆழமான அர்த்தத்தில் சொன்னால், மக்கள் ஆணை மட்டும் போதாது. அதை விட முக்கியமாக, அதற்கு வேண்டிய அரசியல் திட சித்தம்–political will–இருக்க வேண்டும். அது என்பிபியிடம் உண்டா?

அமெரிக்க எழுத்தாளரும் அறிஞரும் ஆகிய மார்க் டுவைன் கூறியிருக்கிறார் தேர்தல்கள் மூலம் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்றால் அவர்கள்– அதாவது அரசுகள்– நாங்கள் அதைச் செய்ய மாட்டார்கள் என்று. இது தான் யதார்த்தம். தேர்தல்கள் மூலம் தலை கீழ் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. மார்க்சிஸ்ட்களின் வார்த்தைகளில் சொன்னால், புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. இலங்கைத் தீவின் சிங்களபௌத்த அரசுக் கட்டமைப்பும் அவ்வாறு புரட்சிகரமான மாற்றங்களுக்குத் தயாரா? ஜேவிபி அல்லது என்பிபி இதுவரையிலும் அவ்வாறான அடிப்படை மாற்றங்களுக்குத் தேவையான அரசியல் திடசித்தத்தை வெளிக்காட்டியிருக்கவில்லை.

எம்பிபி நாடாளுமன்றத்தில் பெற்றிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையானது தமிழ் நோக்குநிலையில் இருந்து பார்த்தால், உலகத்துக்கு சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் வரையறைகளை அல்லது விரிவுகளை வெளிப்படுத்த கிடைத்திருக்கும் ஒரு வாய்ப்பு என்று சொல்லலாம். விகிதரசாரப் பிரதிநிதித்துவத்தின் கீழ் ஒரு தனிக்கட்சி அவ்வாறு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்றிருப்பது அரிதானது.

ஆனால் அதற்காக ஜேவிபியின் தமிழ் நண்பர்களான சில படிப்பாளிகள் கூறுவது போல, தமிழ் முஸ்லிம் மக்களுடைய ஆணையோடு வந்திருக்கும் முதலாவது அரசாங்கம் இது வல்ல.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் போது நல்லாட்சி அரசாங்கம் என்று அழைக்கப்பட்ட மைத்திரி – ரணில் அரசாங்கமும் அவ்வாறு தமிழ்,சிங்கள, முஸ்லிம் ஆகிய மூன்று இனங்களின் ஆணைகளோடும் ஆட்சிக்கு வந்த ஒரு அரசாங்கம்தான். அதை விட முக்கியமாக அந்த அரசாங்கத்திற்கு பிராந்திய மற்றும் அனைத்துலக ஆசீர்வாதங்களும் இருந்தன. அப்படிப்பட்ட அரசாங்கத்தாலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வை கண்டு பிடிக்க முடியவில்லை. 2018ஆம் ஆண்டு ஒரு யாப்புச் சதி மூலம் மஹிந்த அதை மைத்திரியின் துணையோடு குழப்பினார். இது நடந்து சரியாக 6 ஆண்டுகளின் பின் இலங்கைத் தீவில் அதேபோல மற்றொரு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது.

என்பிபி அரசாங்கமானது பின்வரும் முக்கியத்துவங்களைக் கொண்டிருக்கின்றது. முதலாவது முக்கியத்துவம், மூன்று இனங்களின் ஆணை பெற்ற அரசாங்கம். இரண்டாவது முக்கியத்துவம், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட ஓர் அரசாங்கம். மூன்றாவது முக்கியத்துவம், ஒரே கட்சி அரசாங்கம். தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கும் திருப்பகரமான முடிவுகளை எடுப்பதற்கும் எந்த ஒரு பங்காளிக் கட்சியிலும் தங்கியிருக்கத் தேவையில்லை. ஆனால் இங்கு பிரச்சனை என்னவென்றால், அதாவது தமிழ் நோக்கு நிலையில் இருந்து பிரச்சனை எதுவென்றால் கட்டமைப்பு சார்ந்த மாற்றங்களைச் செய்வதற்கு தேவையான அரசியல் திடசித்தம் இந்த அரசாங்கத்திடம் உண்டா என்பது தான்.

சுமந்திரன் தேர்தல் பிரச்சாரங்களின் போது ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார். முன்பு தாங்கள் நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் ஒன்றாக உழைத்து உருவாக்கிய எக்கிய ராஜ்ய என்ற அந்தத் தீர்வின் இடைக்கால வரைபுவரை ஜேவிபி தங்களுக்கு முழுமையாக ஆதரவைக் காட்டியது என்று. அந்த தீர்வைதான் அவர்கள் மீண்டும் தூசுதட்டி எடுத்து மேசையில் வைக்கப் போகின்றார்களா?

அதை எதிர்ப்பதற்கு கஜேந்திரக்குமார் மக்கள் ஆணை கேட்டிருந்தார். அவருக்கு அந்த ஆணை கிடைக்கவில்லை. ஏற்கனவே இருந்த இரண்டு ஆசனங்களில் ஒன்றை அவர் இழந்துவிட்டார். அதேசமயம், எக்கிய ராஜ்ஜியவுக்கு மீண்டும் ஒரு மக்களாணையை மறைமுகமாகக் கோரிய சுமந்திரன் தோற்கடிக்கப்பட்டு விட்டார். ஆயின், தமிழ் மக்கள் எப்படிப்பட்ட ஒரு தீர்வைக் கேட்கின்றார்கள்?

நிச்சயமாகத் தமிழ்மக்கள் இந்த முறை தீர்வுக்காக என்பிபிக்கு வாக்களிக்கவில்லை. என்பிபியும் தமிழ் மக்களுக்கு என்ன தீர்வு தருவேன் என்று கூறித் தேர்தலில் நிற்கவில்லை. 2015ஆம் ஆண்டும் தமிழ் மக்கள் ராஜபக்சவை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக வாக்களித்தார்கள் தவிர தீர்வுக்காக வாக்களிக்கவில்லை. இங்குள்ள பிரச்சினை என்னவென்றால் தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்கப் போகின்றோம் என்று கூறி ஒரு தீர்வை முன்வைத்து எந்த ஒரு சிங்களக் கட்சியும் சிங்கள மக்களின் ஆணையைப் பெற முடியாது என்பது தான்.

ஜேவிபியின் தமிழ் நண்பர்கள் அடிக்கடி கூறுவார்கள், தென்னிலங்கையில் ஏற்பட்ட தன்னெழுச்சிப் போராட்டங்களின் பின் பேரினவாதம் தணிந்து விட்டது அல்லது பலவீனமடைந்து விட்டது என்று.மேலும் ஜனாதிபதித் தேர்தலின் போதும் நாடாளுமன்றத் தேர்தலின் போதும் இனவாதம் பேசப்படவில்லை என்றும் அவர்கள் கூறுகிறார்கள். உண்மை ஆனால் இனவாதம் பேசப்படவில்லை என்பதனால் இனவாதம் தணிந்து விட்டது என்று பொருளாகாது பேசாமல் இருப்பதன் மூலம் இனவாதம் தன்னைத் தக்க வைத்துக் (22ம் பக்கம் பார்க்க)

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

16 நவம்பர் 2024 - 22 நவம்பர் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன்

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டி ருந்த திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களது ஏழாவது ஆண்டு நினைவு நாள் 16 நவம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.. திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 25வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி

பேராலை பளைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி அவர்களது 25வது ஆண்டு நினைவு தினம் 21 நவம்பர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 5வது ஆண்டு நினைவஞ்சலி



### பேராசிரியர் பூபதி கதிர்காமநாதன்

யாழ்.குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வாழ்விடமாகவும் கொண்டிருந்த பேராசிரியர் பூபதி கதிர்காமநாதன் அவர்களது ஐந்தாவது ஆண்டு நினைவு நாள் 24 நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். பேராசிரியர் பூபதி கதிர்காமநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு கந்ததாசன் சிவபாதம்

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்ததாசன் சிவபாதம் அவர்களது 31ம் நாள் நினைவு நாள் 19 நவம்பர் 2024 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கந்ததாசன் சிவபாதம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம்

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த யாழ்.இந்துமகளிர் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 17 நவம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 30வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சடாச்சரசுந்தம் கந்தசாமி

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சடாட்சரசுந்தரம் கந்தசாமி அவர்களது 30வது ஆண்டு நினைவு தினம் 29 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சடாட்சரசுந்தரம் கந்தசாமி அவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



16 நவம்பர் 2024 சனிக்கிழமை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி புஸ்பராணி இராமச்சந்திரன் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



17 நவம்பர் 2024 ஞாயிறுக்கிழமை யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




19 நவம்பர் 2024 செவ்வாய்க்கிழமை சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கந்ததாசன் சிவபாதம் அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



19 நவம்பர் 2024 செவ்வாய்க்கிழமை கனடாவை வாழ்விடமாகக் கொண்டிருக்கும் திரு விஜயரெத்தினம் சாந்தகுமார் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு விஜயரெத்தினம் சாந்தகுமார் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



20 நவம்பர் 2024 புதன்கிழமை வலந்தலை காரைநகரைப் பிறப்பிடமாகவும் வெளிக்குளம் வவுனியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கைலாசபிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



20 நவம்பர் 2024 புதன்கிழமை மட்டுவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பாபிள்ளை வன்னியசிங்கம் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



20 நவம்பர் 2024 புதன்கிழமை மட்டுவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மகேஸ்வரி வன்னியசிங்கம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



19 நவம்பர் 2024 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வி கீர்த்தனா பேரின்பமூர்த்தி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வி கீர்த்தனா பேரின்பமூர்த்தி அவர்கள் தனது பெற்றோர் உறவுகளுடன் இணைந்து 20 நவம்பர் 2024 புதன்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



21 நவம்பர் 2024 வியாழக்கிழமை பேராலை பளையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணபிள்ளை இலட்சுமி அவர்களது 25வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



22 நவம்பர் 2024 வெள்ளிக்கிழமை கனடாவை வாழ்விடமாகக் கொண்டிருக்கும் திருமதி தேவிகா செல்வராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி தேவிகா செல்வராஜா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



07 நவம்பர் 2024 வியாழக்கிழமை சீரடிபாபா உபயமாக கனடாவில் வசிக்கும் திரு திருமதி சுதர்சன் நிவேதிகா இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்
THE INTERNATIONAL CENTRE | இன்ரர்நஷனல் சென்ரர்
6900 Airport Road, Mississauga, Ontario L4V 1E8
மாவீரர் துயிலும் இல்லம்
மாவீரர் நாள்
நவம்பர் 27-2024 - புதன்கிழமை
எங்களுக்காகத் தமிழீழ மண்ணுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு
Tamil National Heroes Day
To Remember Our Heroes'
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism
ரொறன்ரோ
27-11-2024
THE INTERNATIONAL CENTRE
6900 Airport Road
Mississauga
ON L4V 1E8
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி
மொன்றியல்
27-11-2024
புதன்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
ஒட்டாவா
27-11-2024
புதன்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON K2G 1W2
Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance

உ

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada Tel: 416-321-6104 Fax: 416-321-7557 www.ayyappan.ca

Facebook: Canada Sri Ayyappan Hindu Temple



## மண்டல மகர விரத விஞ்ஞாபனம்





## ஐயப்பன் மாலை அணியும் வைபவம்

## 16-11-2024 சனிக்கிழமை

ஐயப்பன் மெய்யடியார்களே!

ஸ்காபரோ 635 மிடில்பீல் றோட்டில் அமைந்துள்ள கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் மண்டல மகர விரத மாலை அணியும் வைபவம் 16.11.2024 சனிக்கிழமை அதிகாலை 7.00 மணிக்கு கணபதி ஹோமம். தொடர்ந்து சாஸ்தா ஹோமம். அதிகாலை 8.30 மணிமுதல் இரவு 8.00 மணிவரை புனித துளசிமாலை அணியும் வைபவம் இடம் பெறும்.

மாலை அணிந்து விரதமிருக்க விரும்பும் அடியார்கள் தங்கள் பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ளவும்.

அடியார்கள் புனிதமான ஐயப்பன் மகரமண்டல விரதகாலத்தில் பக்திசிரத்தையுடன் காலை, மாலை நடைபெறும் ஐயப்ப பூஜை விழாக்களில் கலந்து கொள்வதுடன் முடிந்த வரை மண்டலபூஜை உபயங்களைப் பொறுப்பேற்றுச் சிறப்பித்து ஐயப்ப பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அழைக்கின்றோம்.

*முக்கிய குறிப்பு: கைத்தொலைபேசியை ஆலயத்தினுள் பாவிக்க வேண்டாம்

## MANDALA MAKARA VIRATHAM AND AYYAPPAN SACRED THULASI MALAI WEARING FESTIVAL

**Mandala Makara Viratha & Sacred Thulasi Mala Wearing Festival shall be held at canada Sri Ayyappan Hindu Temple, on Saturday, November 16, 2024 Starting with Ganapathy Homam at 7.00am, followed by Sastha Homam and Thulasi Mala Wearing from 8.30am to 8.00pm.**



***Note: Please don't use phones inside the TEMPLE**

*இறை சேவையிலுள்ள ஆலய அறங்காவலர்சபை*

ஈழமுரசு

ஈழமுரசும்
கனடா வாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும்
தமிழீழத் தேசிய தலைவர்
மேதகு வே. பிரபாகரன்
அவர்களின்

70



தலைவர்
பிறந்தநாள்
அதுவே
தமிழர்
நிமிர்ந்த நாள் !

வீழ்ந்து விடாத
வீரம்
மண்டியிடாத
மானம்

இருப்பாய்
தமிழா
நெருப்பாய் !

AAROSAI "WHERE MUSIC BEGINS..."

# அகவை விழா
# மாபெரும் எழுச்சி விழா

2024 நவம்பர் 26 செவ்வாய்க்கிழமை

மாலை 5 மணி

**TORONTO**
METROPOLITAN CENTRE
3840 Finch Ave East
Scarborough, ON, M1T 3T4
(Kennedy & Finch)

**MONTREAL**
LE CHATEAU ROYAL
3500 Bd du Souvenir
Laval, Montreal, QC,
H7V 1X2, (514) 660-5891

ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவருக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்

**தொடர்புக்கு: 289-277-5920**

# நாடாளுமன்றத் தேர்தல் 2024 தமிழ்க்கட்சிகள் விளங்கிக் கொள்ள வேண்டிய எளிமையான பேருண்மைகள்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



தமிழ்த் தேசியப் பிரதிநிதித்துவம் படிப்படியாகக் குறைவதைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. கடந்த நாடாளுமன்றத்தில் 13 ஆசனங்கள். இந்த முறை ஒன்பது ஆசனங்கள். மருத்துவர் அர்ஜுனாவின் அரசியல் நிலைப்பாடுகள் ஸ்திரமானவை அல்ல. எனினும் அவரையும் இணைத்துக் கொண்டால் பத்து ஆசனங்கள். தமிழ்த் தேசியத் தரப்புக்குக் கிடைக்காத ஆசனங்கள் தமிழ்த் தேசிய பரப்புக்கு வெளியே போயிருக்கின்றன.

வடக்கில் மொத்தம் ஐந்து என்பிபி வேட்பாளர்களும் கிழக்கில் இரண்டு என் பி பி தமிழ் வேட்பாளர்களும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். கடந்த நாடாளுமன்றத்தில் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இருவரும் வடக்கிலிருந்தும், பிள்ளையான் கிழக்கில் இருந்தும் சென்றார்கள். மூன்று வேறு கட்சிகளைச் சேர்ந்த மூன்று தமிழ் பிரதிநிதிகள். இப்பொழுது ஒரே தென்னிலங்கைக் கட்சியைச் சேர்ந்த ஏழு பேர்.

என்பிபி இனப்பிரச்சினையைத் தீர்க்கும் என்று நம்பி தமிழ் மக்கள் அதற்கு வாக்களிக்கவில்லை. பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டத் தவறியதன் விளைவே அது.




தமிழ்ச் சமூகமானது ஒருவர் மற்றவரை நம்பாத் தன் பலத்தை தானே நம்பாத் ஒருவர் மற்றவரை சந்தேகத்தோடு பார்க்கின்ற ஒருவருக்கு எதிராக மற்றவர் சூழ்ச்சிக் கோட்பாடுகளைப் புனைகின்ற் சமூகத்தில் மினுங்கிக் கொண்டு தெரியும் ஒருவரை சந்தேகத்தோடு வெறுப்போடு அணுகுகின்ற் வெறுப்பர்கள் அதிகம் நிறைந்த் கூட்டுணர்வு குறைந்த் தாய் நிலத்தை விட்டுப் புலம்பெயரும் வேட்கை மிகுந்த ஒரு சமூகமாக மாறி வருகின்றது.

அவ்வாறு தூர்ந்து கொண்டு போகும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசிய அரசியலுக்கு உண்டு. தன் பலம் உணர்ந்து ஒருவர் மற்றவரை நம்பிக்கையோடு பார்க்கின்ற் உருகிப்பிணைந்த ஒரு திரட்சியாக தமிழ் மக்களைத் திரட்ட வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு உண்டு.

ஆனால் தேசியவாத அரசியல் என்றால் மக்களைத் திரளாக்குவது தான் என்ற எளிமையான பேருண்மையை விளங்கிக் கொள்ளாத அல்லது அதை விளங்கிக் கொள்ளத் தேவையான பண்பாட்டு இதயத்தைக் கொண்டிராத் தேசிய கூட்டுணர்வைக் கொண்டிராத, பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகளின் தோல்வியின் விளைவே, அதிகரித்த சுயேச்சைகளும் கட்சிகளும் ஆகும். இதனால் ஏற்பட்ட சலிப்பினாலும் விரக்தியினாலும் வெறுப்பினாலும் ஒரு பகுதி தமிழ் வாக்காளர்கள் என்பிபியை நோக்கிப் போனார்கள்.

நாடாளுமன்றத்தில் என்பிபி பெற்றிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது திருப்பகரமான மாற்றங்களைச் செய்யப் போதுமான ஒரு பெரும்பான்மை. அப்படிப் பார்த்தால் என்பிபி இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் புரட்சிகரமான முடிவை எடுக்குமா? அல்லது மகாவம்ச மனோநிலையின் கைதியாக மாறி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தானே தோற்கடிக்குமா? இலங்கைத் தீவியின் எந்த ஒரு தேர்தல் வெற்றியும் எப்பொழுது முழு வெற்றியாக மாறுகிறது என்றால், இனப்பிரச்சினையைத் தீர்க்கும் போது தான். என்பிபி கருதுவது போல இனப்பிரச்சினை, ஒரு மனிதாபிமானப் பிரச்சினையல்ல. அது இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக் கொள்ளாமை



யின் விளைவு தான். இச்சிறிய தீவில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்கள்,தேசிய இனங்கள் உண்டு என்பதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். தமிழ் மக்களை இறமையும் சுய நிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டு, இலங்கைத் தீவின் அரசுக் கட்டமைப்பை பல்லினத் தன்மை கொண்ட ஒன்றாகக் கட்டமைக்க வேண்டும்.

அவ்வாறான அடிப்படை மாற்றம் ஒன்றைச் செய்வதற்கு என்பிபி தயாரா? இப்போதிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதைச் செய்யப் போதுமானது.

அதே சமயம் இம்முறை தேர்தல் முடிவுகளில் தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் நம்பிக்கையூட்டும் விடயங்கள் எவை என்று பார்த்தால் கிழக்கில் பிரதேச வாதத்தை முன் வைக்கும் பிள்ளையான் தோற்று விட்டார். அது பெரிய வாக்கு வித்தியாசத்தில் கிடைத்த தோல்வியல்ல. சில நூறு வாக்குகள் வித்தியாசத்தில் கிடைத்த தோல்விதான். சங்குக்கு யாழ்ப்பாணத்தில் கிடைத்த தோல்வி போல. எனினும் தேர்தல் கணக்கில் அது தோல்வி. கிழக்கில் தமிழரசுக் கட்சிக்கு ஐந்து ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. இது கிட்டத்தட்ட ஒன்றரை மாதத்துக்கு முன் நடந்த ஜனாதிபதி தேர்தலில் தாயக ஒருமைப் பாட்டிற்குக் கிடைத்த வெற்றியின் அடுத்த கட்ட வளர்ச்சி. ஜனாதிபதித் தேர்தலில் கிழக்கிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒரு வேட்பாளருக்கு வடக்கில் மட்டும் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்தன. நாடாளுமன்ற தேர்தலில் கிழக்கு மைய பிரதேச வாதத்துக்கு தலைமை தாங்கும் அரசியல்வாதி தோல்வியுற்றிருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, தாயக ஒருமைப்பாட்டை நிரூபித்தது. நாடாளுமன்றத் தேர்தலில் கிழக்கு தாயக ஒருமைப்பாட்டை நிரூபித்திருக்கிறது. வடக்கையும் கிழக்கையும் பிரித்த ஜேவிபிக்கு வடக்கு கிழக்கில் 7 ஆசனங்கள் கிடைத்திருக்கும் ஒரு பின்னணியில் கிழக்கில் தாயக ஒருமைப் பாட்டுக்கான பலமான மக்கள் ஆணை கிடைத்திருக்கிறது.

மேலும் தமிழரசுக் கட்சி அதிகம் ஆசனங்களை பெற்ற ஒரு தனிக் கட்சியாக மேலெழுந்திருக்கிறது. கடந்த முறையை விட இந்த முறை இரண்டு ஆசனங்கள் அதிகம். ஒரு கட்சியாக அந்த வெற்றியைக் கொண்டாடலாம். ஆனால் தேசத்தைத் திரட்டுவது என்பது கட்சியைப் பலப்படுத்துவது மட்டும் அல்ல. கடந்த நாடாளுமன்றத்தோடு ஒப்பிடுகையில் மொத்த தமிழ் தேசியப் பிரதிநிதித்துவத்தில் மூன்று ஆசனங்கள் இழக்கப்பட்டமை வீழ்ச்சி. என்பிபி யாழ்ப்பாணத்தில் அதிக ஆசனங்களை வென்றிருக்கிறது. கிழக்கிலும் அதற்கு ஆசனங்கள் கிடைத்துள்ளன. அவை தமிழ்த் தேசிய அரசியலின் தோல்விகள். இந்தத் தோல்விகளுக்கு ஊடாகப் பார்த்தால் தமிழரசுக் கட்சி பெற்ற வெற்றியைக் கொண்டாட முடியாது. ஆனால் சுமந்திரன் கட்சியின் வெற்றியைக் கொண்டாடுகிறார். கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாகத் தமிழரசியலைத் தீர்மானிக்கும் சக்தி போல செயற்பட்ட சுமந்திரனும் இந்தத் தோல்விக்குப் பொறுப்பு. அதற்குரிய தண்டனையை வாக்காளர்கள் அவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஒட்டு மொத்தத் தமிழ்த் தேசிய அரசியலில் பின்னடைவை ஏற்படுத்தி விட்டு கட்சி பெற்ற சிறு வெற்றியை எப்படிக் கொண்டாட முடியும்? ஏனைய கட்சிகள் இல்லாமல் தனிக் கட்சியாக வெல்ல முடியும் என்று மார்தட்டுவதே தேசியவாத அரசியலுக்கு,தேசத் திரட்சிக்கு எதிரானது. முன்னணி ஏற்கனவே இருந்த ஓர் ஆசனத்தை இழந்திருக்கிறது. சங்கிற்கு ஒரேயொரு ஆசனந் தான். மானும் மாம்பழமும் வெற்றி பெறவில்லை. சங்குச் சின்னதைப் பயன்படுத்துவதன் மூலம் பொது வேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகளை நாடாளுமன்றத் தேர்தலுக்கும் மடைமாற்றலாம் என்ற எதிர் பார்ப்பு வெற்றி பெறவில்லை.

செல்வம் அடைக்கலநாதனுக்குக் கிடைத்த விருப்பு வாக்குகள் மொத்தம் 5695. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் இம்முறையும் வெற்றி பெறவில்லை. தென்னிலங்கையில் இரண்டு தடவை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட ஜேவிபிக்கு வடக்கில் 5 ஆசனங்கள். ஆனால் ஆயுதப் போராட்டத்தில் உறுப்புகளை இழந்தவர்களும் உட்பட முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தவர்கள் வெற்றி பெறவில்லை. சசிகலா எதிர்பார்த்த அனுதாப வாக்குகள் அவருக்குக் கிடைக்கவில்லை. தென்மராட்சியில் ரவிராஜ்ஜின் நினைவுகளை விடவும் அர்ஜுனாவின் கலகம் அதிக வாக்குகளை வென்றிருக்கின்றது.

அர்ஜுனாவுக்கு கிடைத்த வெற்றியை வைத்து சமூக வலைத்தளங்களில் யாழ்ப்பாணத்தவர்கள் பரிகசிக்கப்படுகிறார்கள். ஆனால் அந்த வெற்றியை சமூக வலைத்தளங்கள் மற்றும் யூடியுப்கள் உருவாக்கும் புதிய அரசியல் பண்பாட்டுக்கூடாகவே விளங்கிக் கொள்ள வேண்டும். யுடியூபர்களின் காலத்தில் தேசத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் பொருத்தமான உபாயங்களைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. அதைவிட முக்கியமாக தமிழ்த் தேசிய அரசியலில் காணப்படும் தலைமைத்துவ வெற்றிடம் தான் அர்ஜுனாவைப் போன்றவர்களின் வெற்றிகளுக்கு மூல காரணம். அந்த வெற்றிடத்திற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகளே பொறுப்பு. முடிவாக, தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தமிழ் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்களும் கற்றுக் கொள்ள வேண்டிய அடிப்படை உண்மைகள் வருமாறு.

முதலாவது பேருண்மை. தேசியவாத அரசியல் எனப்படுவது மக்களை ஒரு பெரிய திரளாகக் கூட்டிக் கட்டுவது. தேசத்தைத் திரட்டத் தவறினால் தென்னிலங்கை மையக் கட்சிகள் வாக்குகளைக் கவர்ந்து சென்று விடும்.

இரண்டாவது பேருண்மை, சமஸ்ரியை தேர்தல் மூலம் அடைய முடியாது. தேர்தல்களின் மூலம் மட்டும் தேசத்தைத் திரட்ட முடியாது.

மூன்றாவது பேருண்மை, சமஸ்ரியை அடைவதாக இருந்தால் ஈழத் தமிழர்கள் நாட்டுக்கு வெளியே அணிகளையும் கூட்டுக்களையும் உருவாக்க வேண்டும். அந்த அணிகளின் மூலம் தீர்வுக்கான பிராந்திய மற்றும் அனைத்துலகச் சூழலைக் கனியச செய்ய வேண்டும். அவ்வாறு உலகத்தைத் திரட்டுவது என்றால் அதற்கு முதல் இங்கு தாயகத்தில் தேசத்தைத் திரட்ட வேண்டும். தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட தரப்புகளை ஒரு பெருந்திரளாக்க வேண்டும். தேசத்தைத் திரட்டினால் தான் உலகத்தைத் திரட்டலாம். அவ்வாறு தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டத் தவறினால் தென்னிலங்கையை மையக் கட்சிகள் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைப் படிப்படியாக அரித்துத் தின்று விடும்.

# நீர்மூழ்கி தந்திரோபாயம்

**கட்டுரையாளர்**
**தமிழகத்தில் இருந்து**
**கேணல் ஹரிகரன்**



இலங்கையின் புதிய அரசாங்கத்தை தெரிவு செய்வதற்கான பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு நான்கு நாட்கள் முன்னதாக, இந்தியக் கடற்படையின் ஐ.என். எஸ். வேலா என்ற நீர்மூழ்கி கப்பல் கொழும்பு துறை முகத்திற்கு வந்து சேர்ந்தது. மூன்று நாட்கள் பயணமாக வந்த, இந்த நீர்மூழ்கிக் கப்பல் தேர்தல் நடைபெறுவதற்கு முதல் நாள், கொழும்பு துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்றது.

டீசல் எலக்ரோனிக் இயந்திரத்தை கொண்ட கல்வாரி வகையைச் சேர்ந்த இந்த நீர்மூழ்கி, 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதமே இந்திய கடற்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டது. இதன் பயண நோக்கம், செயற்பாட்டு திருப்பம் Operational Turn Around (OTR) என இந்திய கடற்படை வகைப்படுத்தியிருந்தது. கப்பலின் செயல் திறனை அதிகரித்துக் கொள்வதையே இவ்வாறு குறிப்பிடுகிறார்கள். கடந்த 18 மாதங்களில் இலங்கைக்கு வந்து சென்ற நான்காவது இந்திய நீர்மூழ்கி கப்பல் இதுவாகும்.

கடந்த ஆண்டு ஜீன் மாதம் ஐ.என்.எஸ். என்ற நீர்மூழ்கி கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வந்திருந்தது. அதற்குப் பின்னர் இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கையின் சுதந்திரதினம் கொண்டாடப்பட்ட போது, ஐ.என்.எஸ்.கரன்ஜ் என்ற நீர்மூழ்கி கொழும்பு துறைமுகத்திற்கு வந்தது. அதனைத் தொடர்ந்து, ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறுவதற்கு சுமார் ஒன்றரை மாதம் முன்னதாக ஒகஸ்ட் முதல் வாரத்தில் ஐ.என்.எஸ்.ஷால்கி என்ற நீர் மூழ்கிக் கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு பயணம் மேற்கொண்டிருந்தது.

அநுரகுமார திசாநாயக்க அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் ஒக்டோபர் 19ஆம் திகதி ஐ.என்.எஸ்.கல்பேனி என்ற சிறிய ரக இந்தியப் போர்க்கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்தது.

அநுரகுமார அரசாங்கம் முதலாவதாக எதிர்கொண்ட வெளிநாட்டு போர்க் கப்பல் இது அல்ல. சீனாவின் 'PO LANG' என்ற கடற்படை பயண பயிற்சி போர்க்கப்பலே அநுரகுமார திசாநாயக்க அரசாங்கம் முதலாவதாக எதிர்கொண்ட வெளிநாட்டு போர்க் கப்பல் ஆகும்.

அநுர அரசாங்கத்தின் போக்கை நாடி பிடித்துப் பார்ப்பதற்காக அனுப்பப் இபட்ட கப்பல் தான் இது. ஏனென்றால் வெளிநாட்டு ஆய்வு கப்பல்களுக்கு இலங்கை அரசாங்கம் கடந்த ஜனவரி மாதம் தடை விதித்திருந்தது. ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இந்த தடை அடுத்த ஆண்டு நீக்கப்படும் என கூறியிருந்தது. துறைமுக பயணமாக போர்க்கப்பல்கள் வருவதற்கு எந்த தடையும் இல்லை என்றும், ஆய்வுக்கு கப்பல்களை அனுமதிக்க முடியாது என்றும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இந்தியாவின் எதிர்ப்புகளை அடுத்து, சீனாவின் ஆய்வுக் கப்பல்களை தனியாக தடுக்க முடியாத இலங்கை அரசாங்கம், ஒட்டுமொத்தமாக எல்லா வெளிநாட்டு ஆய்வு கப்பல்களுக்கும் தடையை விதித்தது.இந்தத் தடையை அடுத்த ஆண்டு, புதிய அரசாங்கம் நீக்குமா அல்லது தொடருமா என்பது இன்னமும். தெரியவரவில்லை.

இந்தச் சூழலில், கடந்த மாதம் ஐ.என். எஸ்.கல்போனி என்ற போர்க்கப்பலை இந்தியா கொழும்புக்கு அனுப்பி வைத்தது. அதன் பின்னர் ஐ.என்.எஸ்.வேலா என்ற நீர் மூழ்கி கப்பல் கடந்த வாரம் கொழும்புக்கு பயணம் மேற்கொண்டு திரும்பியிருக்கிறது.

முன்னதாக இந்தியா தனது போர்க் கப்பல்களை இலங்கை துறைமுகங்களுக்கு தொடர்ச்சியாக அனுப்பி வந்தது. ஆனால், கடந்த 18 மாதங்களில் நான்கு நீர்மூழ்கி கப்பல்களை இலங்கைக்கு அனுப்பி இருப்பது கவனிக்கத்தக்க ஒரு விடயமாகும்.





இந்திய பெருங்கடலில் குறிப்பாக இலங்கைக்கு அன்மையாக பகுதிகளில், சீனாவின் நீர்மூழ்கிகள் மற்றும் ஆய்வு கப்பல்களின் நடமாட்டம் அதிகம் இருப்பதாக, இந்திய கடற்படை அவ்வப்போது எச்சரித்து வந்திருக்கிறது. சீன நீர்மூழ்கிக் கப்பல்களின் நடமாட்டத்தை இந்தியா தொடர்ச்சியாக அவதானித்து வந்தாலும், அண்மைக் காலத்தில் அவற்றின் அச்சு றுத்தல் அதிகரித்திருக்கிறது.

அதேபோலத் தான், சீனாவின் ஆய்வுக் கப்பல்களின் நடமாட்டங்களும் வங்கக்கடல் இந்திய பெருங்கடல் பகுதிகளிலும் காணப்படுகின்றன. இதனை இந்தியா தனக்கான அச்சுறுத்தலாக கருதுகிறது. குறிப்பாக, சீன போர்க் கப்பல்கள், நீர்மூழ்கிகள், ஆய்வுக் கப்பல்கள் என்பன இலங்கையை கட்டுப் படுத்திக் கொள்வதை இந்தியா தனக்கான பாதுகாப்பு அச்சுறுத்தலாக பார்க்கிறது.

சீனாவிடம் 60 வரையிலான நீர்மூழ்கிகள் இருப்பதாக நம்பப்படுகிறது. கடந்த மாதம் அமெரிக்கா வெளியிட்ட அறிக்கையில், சீனாவில் அணுசக்தி நீர்மூழ்கிகளில் ஒன்று விபத்தில் மூழ்கியதாக கூறப்பட்டிருந்தது. சீனாவிடம் எத்தனை நீர்மூழ்கிகள் உள்ளன என்பது எப்படி எவருக்கும் தெரியாமல் உள்ளதோ அதே போலத் தான் இந்த விபத்தையும் சீனா வெளியே தெரியாமல் மறைத்து விட்டது. சீனாவிடம், அணுசக்தி தாக்குதல் நீர்மூழ்கிகள் 6, பலிஸ்டிக் ஏவுகணை தாக்குதல் அணுசக்தி நீர்மூழ்கிகள் 6, டீசல் எலக்ரோனிக் தாக்குதல் நீர்மூழ்கிகள் 48 என்பது சீனாவிடம் இருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன.

இவற்றில் கணிசமானவற்றை சீனா இந்திய பெருங் கடலில் நடமாட விட்டிருக்கிறது. இதனை இந்தியா அறிந்திருந்தாலும் அதனை முற்று முழுதாக தடுக்க முடியாமல் இருக்கிறது. இவ்வாறு நடமாடுகின்ற சீன நீர்மூழ்கிகள், இலங்கையை தளமாக பயன்படுத்திக் கொண்டு விடக்கூடாது என்பது தான் இந்தியாவின் பிரதான கரிசனையாக இருக்கிறது.

2013ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது சீனாவின் நீர்மூழ்கி கப்பல்கள் கொழும்பில் தரித்துச் சென்றது இந்தியாவுக்கு அபாய எச்சரிக்கையாக அமைந்தது.

அதற்குப் பின்னரே இலங்கையை தனது பாதுகாப்பு வளையத்துக்குள் வைத்துக் கொள்வதற்கான வியூகங்களை இந்தியா வகுக்க தொடங்கியது. அதன் ஒரு கட்டமாகவே ராஜபக்ஷவினரை ஆட்சியில் இருந்து அகற்றும் திட்டத்தையும் இந்தியா செயற்படுத்தியதாக ஒரு கருத்து நிலவியது. இப்போது நிலைமை எங்கேயோ சென்றுவிட்டது. சீனா தனது நீர்மூழ்கிகளை மாத்திரமன்றி, ஆய்வுக் கப்பல்களையும் மிகத் தாராளமாக இந்திய பெருங்கடலில் நடமாடவிட்டு, இந்தியாவுக்கு பயங்காட்டிக் கொண்டிருக்கிறது.

இந்தியா இதனை உற்று நோக்கிக் கொண்டிருந்தாலும் தடுத்து நிறுத்த முடியாத சிக்கல் அதற்கு இருக்கிறது. இந்தியாவினால் இப்போது முடிந்த ஒரேயொரு காரியம் சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கை வருவதை தடுத்து நிறுத்தியது மட்டும் தான். அது கூட எந்தளவு நாட்கள் நீடித்திருக்கும் எனக் கூற முடியாது.

அதேவேளை சீனப் போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிகள், ஆய்வுக் கப்பல்களை இந்தியப் பெருங்கடலில் தடுத்து நிறுத்துவதற்கான ஒரு வழியாக இலங்கையின் துறை முகங்களுக்கு தனது போர்க்கப்பல்களை தொடர்ச்சியாக அனுப்பிக் கொண்டிருப்பதை ஒரு தந்திரோபாயமாக கையாளப் பார்க்கிறது இந்தியா. ஆனால் இந்தத் தந்திரோபாயம் மாத்திரம் இந்தியாவுக்கு போதுமானதல்ல. அடுத்தடுத்து அனுப்பி வைக்கப்படும் நீர்மூழ்கி கப்பல்கள் இலங்கை துறைமுகங்களில் தரித்து செல்வதால் மாத்திரம், இந்தியாவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு விடாது.

அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு இந்தியா வேறு பல உபாயங்களையும் கையாள வேண்டிய நிலையில் இருக்கிறது. ஆனால் சீனாவுக்கு எதிரான இந்தியாவின் அந்த வியூகம் இன்னமும் கொடுக்கின்ற வகையில் அமையவில்லை இலங்கையில் புதிதாக அமையப் போகும் அரசாங்கத்தை இந்தியா கையாளப் போகின்ற விதமும் இந்தத் தருணத்தில் முக்கியமாகப் போகின்ற விதமும் சீனா கையாளப் போகின்ற மானவை. இலங்கையின் புதிய அரசாங்கம் கையாளப் போகும் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு கொள்கைகள் இந்தியாவுக்கு சார்பானதாகவோ சீனாவுக்கு சார்பான தாகவோ அமையமுடியாது.

அப்படியிருந்தாலும் கூட, அதிகரித்து வரும் பிராந்திய பதற்ற ங்களின் தாக்கங்களில் இருந்து இலங்கையினால் அவ்வளவு இலகுவாகத் தப்பித்துக் கொள்ள முடியாது

## தனித்துப் போட்டியிட்ட தமிழரசுக்கட்சிக்கு வடக்கு கிழக்கு மக்கள் வழங்கிய ஆணை!

(4ம் பக்கத் தொடர்ச்சி) மக்கள், எமது கட்சி பிரதிநிதிகளைத் தெரிவு செய்துள்ளனர். இதில் மட்டக்களப்பில் விசேடமாக மூன்று ஆசனங்களைப் பெற்றுள்ளோம். இதேநேரம் வேறு இடங்களிலும் ஒவ்வொரு ஆசனங்களைப் பெற்றுள்ளோம். இதில் மிக விசேட மாக யாழ்ப்பாணம் ஒரேயொரு ஆசன த்தைப் பெற்றிருக்கின்றோம். என் னைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட ரீதியிலும், கடந்த 14 வருடங்கள் நாடாளுமன்றத்திலும் சேவை செய்த நான் இந்த முறை மக்களால் தெரிவு செய்யப்படவில்லை.

மக்களுடைய தெரிவை நான் மதிக்கின்றேன், ஏற்றுக் கொள்கின்றேன். இத்தனை காலமாக எனக்கு எல்லா விதங்களிலும் உறுதுணையாக உதவி செய்து வந்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழரசுக் கட்சிக்கான தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் தமிழரசின் மத்திய செயற்குழு கூடி முடிவு எடுக்கப்படும். அவ்வாறான சகல முடிவுகளும் எப்போதும் கட்சி முடிவாகவே எடுக்கப்படும். ஆகவே, கட்சி என்ன தீர்மானம் எடுக்கும் என்று நான் முன்கூட்டியே சொல்லல முடியாது.

எங்களது கட்சியைப் பொறுத்த வரையில் கட்சியின் முடிவே இறுதி யாக இருக்கும். நான் கட்சியின் சகல முடிவுகளுக்கும் கட்டுப்பட்டவனாக இருப்பேன். சிறீதரன் மிகப் பெரிய வெற்றி பெற்றிருக்கின்றார். அதிகளவான விருப்பு வாக்குகளையும் பெற்றுள்ளார். அவர் உட்பட தமிழரசுக் கட்சியில் இம்முறை வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துக்கள். அவர்களுக்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்றார்.

## வரலாற்றுச் சாதனைகளைக் குவித்துள்ள....

(24ம் பக்கத் தொடர்ச்சி) சக்தி தேசியப்பட்டியலில் 18 ஆசனங்களை கைப்பற்றியதுடன், முன்பு இந்த சாதனையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெற்றிருந்தது. 2020 நாடாளுமன்றத் தேர்தலில் 17 தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளைப் பெற்றிருந்தது. அதன்படி, இந்த ஆண்டு பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் கட்சி பெற்ற வெற்றி, இந்த நாட்டின் வரலாற்றில் ஒரு அரசியல் கட்சி தேர்தலில் இத்தனை சாதனைகளைப் படைத் தது முதல் முறையாகும். அதன்படி இந்த ஆண்டு பொதுத் தேர் தலை தேர்தல் வரலாற்றை புதுப்பித்த தேர்தல் என்று கூறினால் மிகையாகாது.

**எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!**
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:- 416 841 9600

# பிராந்திய அரசியலின் முடிவும் தேசிய அரசியலின் தொடக்கமும்

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



மட்டக்களப்பு மாவட்டத்தைத் தவிர, நாடு முழுவதும் தேசிய மக்கள் சக்தியே (NPP) வெற்றியடைந்துள்ளது. மட்டக்களப்பிலும் இரண்டாவது இடத்தில் தேசிய மக்கள் சக்தி (NPP) யே நிற்கிறது.

சுதந்திரத்துக்குப் பின்னான இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு தேசியக் கட்சி, நாடு முழுவதிலும் வெற்றியீட்டியது இந்தத் தடவை தான். இதற்கு முன்னான தேர்தல்களில் ஐ.தே.கவோ, பொதுஜன பெரமுனவோ சு.கவோ பெரும்பான்மையை அல்லது அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றாலும், அதில் வடக்குக் கிழக்குப் பிராந்தியங்கள் விலகியே இருந்தன. அல்லது வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களை அவற்றினால் வெற்றி கொள்ள முடியவில்லை.

ஆனால் இந்தத் தடவை வடக்குக் கிழக்கிலும் முதன்மையிடத்தை தேசிய மக்கள் சக்தி (NPP) பெற்றுள்ளது. இது தேசிய மக்கள் சக்தியின் அரசியற் கோட்பாட்டினதும் நடைமுறைகளினதும் வெற்றியா? அல்லது அதன் மீதான நாடளாவிய நம்பிக்கைகளின் விளைவா? என்பது ஆராய்வுக்குரியது.

பல தசாப்தங்களாக சமூகப் பிராந்தியம் (Social region) மற்றும் புவியியற் பிராந்திய (Geographical region) அரசியலில் செல்வாக்குச் செலுத்தி வந்த தமிழ்த்தேசிய, முஸ்லிம் தேசிய, மலையகத் தேசியக் கட்சிகளையும் அவற்றின் அரசியலையும் கடந்து தேசியமக்கள் சக்தி (NPP) யை மக்கள் நெருங்கிச் செல்ல நேர்ந்தது எதற்காக அல்லது எதனால்?

தேசிய மக்கள் சக்தி இந்த மக்களுக்கு இதுவரை ஆற்றிய நல்விளைவுகளினாலா? நிச்சயமாக இல்லை. அதற்கான ஆட்சியதிகாரத்தை அது கொண்டிருக்கவுமில்லை. அதனுடைய ஐம்பது ஆண்டுகால அரசியற் செயற்பாட்டுப் பரப்பில் வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களோ, மலையக, முஸ்லிம், தமிழ்ச் சமூகப் பிராந்தியங்களோ உள்ளடங்கியிருக்கவுமில்லை. உதிரிகளாக சிலர் தேசிய மக்கள் சக்தியோடு அல்லது ஜே.வி.பியோடு இணைந்திருந்தனரே தவிர, சமூகப் பிராந்தியமாகவும் புவியியற் பிராந்தியமாகவும் இணைந்திருக்கவில்லை.

ஆனால், தேசிய மக்கள் சக்தி (NPP) யை இன்று சிங்கள மக்கள் மட்டுமல்ல, தமிழ், முஸ்லிம், மலையக மக்களும் நம்பியிருக்கிறார்கள். அதனுடைய இளைய தலைமுறை உறுப்பினர்களின் ஆற்றலையும் நேர்மையையும் மதிக்கிறார்கள். அந்த நம்பிக்கையின் மதிப்பின் வெளிப்பாடே நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் நாடளாவிய ரீதியில் பெற்ற மாபெரும் வெற்றியாகும். இது வரலாற்று வெற்றியாகவே கருதப்படுகிறது. அது உண்மையும் கூட.

மாற்றத்தை அல்லது தாங்கள் விரும்புகின்றதொரு அரசியற் சூழலை தேசிய மக்கள் சக்தி உருவாக்கும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த நம்பிக்கையும் எதிர்பார்ப்புமே அதனை நோக்கி மக்களை நெருங்கிச் செல்ல வைத்தது. அதுவே தேசிய மக்கள் சக்தியின் பிராந்திய வெற்றியாகும்.

அதேவேளை மக்கள் எதிர்பார்க்கின்ற விரும்புகின்ற வெற்றியை தேசிய மக்கள் சக்தி வழங்கினால் அது மக்களுக்குக் கிடைக்கும் மக்கள் பெறுகின்ற வெற்றியாக அமையும்.

இந்தப் பின்னணியில் மக்கள் தமக்குரிய தமக்குப் பொருத்தமானதெனக் கருதுகின்ற அரசியற் தெரிவைச் செய்வது அவர்களுடைய உரிமையும் தேவையுமாகும். அதை மறுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை.

இந்தச் சூழலிற் தான் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் பிராந்திய அரசியலின் எதிர்காலத்தைக் குறித்த கேள்விகளைப் பலமாக்கியிருக்கிறது. இப்படித்தான் நடக்கும் என விடயங்களைக் கூர்மையாக நோக்குவோர் ஓரளவுக்கு எதிர்பார்த்திருந்தனர். அது நடந்திருக்கிறது. இதற்குக் காரணம்

1.பிராந்திய (தமிழ்த்தேசியம், முஸ்லிம் தேசியம், மலையகத் தேசியம்) அரசியற் கோட்பாட்டின் வீரியமின்மையும் நடைமுறைப் பலவீனங்களும்.




2.ஆளுமைக் குறைபாடும் ஆற்றலின்மையும் கொண்ட தலைமைகள்.

3. கட்சிகளின் கட்டமைப்புப் பலவீனம்.

4. செயற்பாட்டுத் திறனின்மை.

5.மக்களுடனான உறவுச் சிக்கல்.

6.நேர்மையீனம். 7 இராசதந்திரப் போதாமை.

8.சமூக, பொருளாதார அடிப்படைகளில் அக்கறையற்ற தன்மை

9. அர்ப்பணிப்பின்மை

10.வேலைத்திட்டங்கள் எதுவும் இல்லாத நிலை.

11. பொறுப்புக் கூறல் பொறுப் பெடுத்தல் பொறுப்புணர்தல் ஆகியவை இல்லை.

12. ஜனநாயக விழுமியங்களைப் பொருட்படுத்தாக நடவடிக்கைகளும் நடத்தைகளும்.

13. பிராந்திய அரசியலையும் தேசிய அரசியலையும் கையாள்வது தொடர்பில் கொண்டுள்ள குழப்பங்களும் முரண்பாடுகளும்.

14. பிராந்திய மட்டத்திலும் தேசிய ரீதியிலும் காணப்பட்ட குறைபாடுகள், குற்றச் செயல்கள், அநீதிகள், மக்கள் விரோதச் செயல்கள், இயற்கை வளச் சிதைப்புகள், ஊழல் முறைகேடுகள், நிர்வாக துஸ்பிரயோகம் போன்ற எதைப் பற்றியும் பொருட்படுத்தாத அரசியல் தலைமைகளின் பொறுப்பின்மை.

இப்படியான பல காரணங்களால் பிராந்திய அரசியலின் அடித்தளம் பலவீனப்பட்டுள்ளது. இதற்கான பொறுப்பினை பிராந்திய அரசியலை மேற்கொண்டு வந்த வருகின்ற அரசியற் கட்சிகளும் அவற்றின் தலைமைகளும் நேர்மையோடு ஏற்க வேண்டும். அத்துடன், பிராந்திய அரசியலை ஆதரித்த ஆதரிக்கின்ற ஊடகங்களும் அதை முன்னிறுத்தி எழுதும் பத்தியாளர்களும் அதனுடைய ஆதரவாளர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுவே அரசியல் நேர்மையும் அறமுமாகும். அப்படிச் செய்தால்தான் அடுத்த கட்ட அரசியலையாவது பொருத்தமானதாக யதார்த்தமானதாக முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும்.

பிராந்திய அரசியல் வீழ்ச்சிக்கான காரணங்கள் வெளிப்படையாகவே தெரிந்தவை எனக் கண்டோம். இவை அனைத்தும் ஏற்கனவே பலராலும் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்பட்டவை. ஆனாலும் அவை குறித்து எந்தக் கவனமும் கொள்ளப்படவில்லை. (இப்போதும் அதுதான் நிலைமை) பதிலாக அவை அனைத்தும் உதாசீனப்படுத்தப்பட்டு, அவமதிக்கப்பட்டன. மட்டுமல்ல, இந்தக் காரணங்களைச் சுட்டிக் காட்டியோரையும் இவற்றின் மீதான விமர்சனங்களை வைத்தவர்களையும் புறமொதுக்கி துரோகப்பட்டியலில் சேர்த்ததே நடந்தது.

விளைவு? இன்று பிராந்திய அரசியல் நெருக்கடிக்குள்ளானதேயாகும். இதை உரிமைகளுக்கான அரசியல் எனச் சித்திரித்தாலும் மறுபுறத்தில் குறுந்தேசியவாத அரசியலாகவே சுருக்கப்பட்டிருந்தது. குறுந்தேசியவாத அரசியலினால் ஒரு போதும் மக்களுடைய தேவைகளையோ பிரச்சினைகளையோ தீர்த்து வைக்க முடியாது.

ஆனால், குறுந்தேசியவாதத்தினால் ஒரு எல்லைவரையில் மக்களுடைய உணர்வுகளைச் சீண்டிக் குவிமையப் படுத்த முடியும். அதுவே நடந்தது.

ஆனால் மக்கள் எப்போதும் தங்களுடைய வாழ்க்கைக்கான தேவைகளையும் பிரச்சினைகளையும் ஓரங்கட்டி விட்டு உணர்ச்சிகரமான அரசியல் விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். அப்படியிருக்கவும் முடியாது. ஏற்கனவே இந்த அரசியல் விளையாட்டில் ஈடுபட்ட பலரும் ஒரு கட்டத்தில் அதிலிருந்து வெளியேறிப் புலம்பெயர்ந்து விட்டனர். (அங்கே போயிருந்து கொஞ்சம் தங்களை வளப்படுத்திக் கொண்டு, பிறகு இந்த அரசியல் விளையாட்டில் ஈடுபடுகின்றவர்களும் உண்டு). மிஞ்சியோர் மாற்று வழிகளைத் தேடிக் கொண்டனர். சிலர் இதிலிருந்து ஒதுங்கிக் கொண்டனர். ஒரு தொகுதியினர் மட்டும் இதை ஒரு வியாபார உத்தியாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆகவே ஒரு சிறிய தரப்பைத் தவிர, ஏனையோர் ஏதோ ஒரு நிலையில் அல்லது வேறு சூழலில் தமது வாழ்க்கையையும் அதற்கான தேவைகளையும் முதன்மையாகக் கொண்டுதான் சிந்திப்பர். அதற்கான அரசியலையே அவர்கள் நாடுவர். இதுதான் உலகெங்கும் உள்ள பொதுவான இயல்பும் நடைமுறையுமாகும். இது தவிர்க்க முடியாதது.

ஏனென்றால், எல்லாவற்றையும் விட முக்கியமானது வாழ்க்கை. வாழ்க்கைக்கே விடுதலையும் பொருளாதாரமும் அரசியலும். ஆகவே வாழ்க்கையை விட்டு விட்டு நீங்கள் உங்களை முழுதாக ஒறுத்து, விடுதலைக்கான அரசியலுக்காக முன் வாருங்கள். வாழ்க்கையையும் விட விடுதலையே முதன்மையானது என்றால் ஒரு எல்லை வரை தான் வருவார்கள். அதற்குப் பிறகு, தங்களுடைய வாழ்க்கையைப் பற்றியே சிந்திக்கத் தொடங்குவர். அதுவே இப்பொழுது நடந்திருக்கிறது.

இதை இந்த உண்மையை இந்த யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளத் தயாரில்லாதவர்கள், தேர்தல் முடிவுகள் வெளியானவுடன், தமிழ் மக்களெல்லாம் தமது இன உணர்வையும் உரிமைக்கான அரசியற் பயணத்தையும் மறந்து விட்டனர் என்று சமூக வலைத் தளங்களிலும் பொதுவெளியிலும் புலம்பத் தொடங்கி விட்டனர். தாங்க முடியாமற் துயரத்தைப் பகிர்கின்றனர்.

சிலர் இதற்கும் மேலே சென்று சனங்களைத் திட்டித் தீர்க்கின்றனர். எந்த வகையான உத்தரவாதத்தின் அடிப்படையில் NPP க்கான ஆதரவைத் தமிழ் மக்கள் வழங்கலாம் என்று சிலர் கேட்கின்றனர். இதுவரையில் NPP யோ JVP யோ தமிழ்மக்களுக்குச் செய்த நன்மைகள் என்ன? என்றும் கேட்கிறார்கள்.

சனங்களைத் திட்டுவதற்கான உரிமையும் தார்மீக அடிப்படையும் யாருக்கும் இல்லை. சனங்கள் இவ்வளவு காலமும் பிராந்திய அரசியலை மேற் கொண்ட தலைவர்களின் கருத்துகளையும் அந்தக் கட்சிகளின் அரசியலையும் ஏற்றே நின்றனர்.


ஏறக்குறைய 75 ஆண்டுகள். 75 ஆண்டுகள் என்பது ஆறு தலைமுறையின் இளமை அழிந்த காலமாகும். இதற்குள் தங்களுடைய இளமையை மட்டும் அவர்கள் இழக்கவில்லை. பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் உறவுகளையும் வாழிடங்களையும் வளமான சூழலையும் இழந்திருக்கின்றனர். ஆனால் இந்தக் காலத்தில் மக்களை விடப் பன்மடங்கு மேலான வாழ்க்கையையே தலைவர்கள் வாழ்ந்தனர். அதேவேளை மக்கள் தமது சக்தியையும் மீறி இவர்களுடைய தலைமையை, அரசியலை ஏற்று நின்றனர். அதற்காகப் பெருந்தியாகங்களைச் செய்தனர்.

இதையெல்லாம் சீரியஸாக எடுத்துக் கொள்ளாமல், தாம் எப்படி நடந்து கொண்டாலும் தமிழ்த்தேசியத்தின் பேராலும் இன உணர்வினாலும் அதையெல்லாம் மக்கள் ஏற்றுக் கொள்வர் என்ற திமிரோடிருருந்தனர். அந்த நம்பிக்கையை வைத்துக் கொண்டே இந்தத் தேர்தலில் கூட இந்தக் களைக் கூத்தாடிகள் கூத்தாடினர்.

இதைக் குறித்தெல்லாம் அதாவது இந்தத் தவறுகளைக் குறித்தெல்லாம் இவர்களில் எவரும் கவலைப்படவில்லை. இவர்களை ஆதரித்தோரும் கண்டு கொள்ளவில்லை, கண்டிக்கவில்லை. இவர்களைப் பொறுத்த வரையில் தாம் எப்படி, எதைச் செய்தாலும் அதையெல்லாம் ஏற்றுக் கொண்டு மக்கள் மந்தைகளாகவே இருப்பர். அப்படி இருக்க வேண்டும் என்பது தான் நிலைப்பாடாகும்.

ஆனால் மக்களோ வரலாறோ ஒரு போதும் அப்படியே இருப்பதில்லை. அதுவே இப்போது நிகழ்ந்திருப்பதாகும். தென்னிலங்கையிலுள்ள மக்கள் விரோதச் சக்திகளுக்கு நடந்ததே வடக்குக் கிழக்குப் பிராந்தியத்திலும் நடந்திருக்கிறது. ஏறக்குறைய இதே காட்சிகள் மலையகத்திலும் முஸ்லிம் பிராயத்தியத்திலும் நடந்திருக்கிறது சிற்சில வேறுபாடுகளுடன். பிராந்திய அரசியலினதும் அதை மேற்கொண்டு(22ம் பக்கம் பார்க்க)

# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2

## உங்கள் வாழ்க்கைக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை இன்றே தேடிக்கொள்ள Friends Matrimony இல் பதிவு செய்யுங்கள்...

# BLACK FRIDAY

UP TO 40% OFF

**REGISTER NOW**



## மணமகள்

## மணமகன்



**ID08120581 (F)**
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 6 Sevai , Ph.D , Senior Engineer , United States

**ID08120622 (F)**
34yrs, 5'4" , Seperated , Uthirattathi , N/A Sevai , Masters Degre , Business development.. , Sri

**ID08120565 (F)**
28yrs, 5'5" , Single , Thiruvaathirai , 8 Sevai , Postgraduate.. , Studies , Sri Lanka

**ID08120639 (M)**
35yrs, 5'6" , Single , Makam , 8 Sevai , Bachelors.. , Own Bussiness , United States

**ID08120616 (M)**
33yrs, 5'5" , Single , Bharani , 11 Sevai , Bachelors.. , Insurance.., Canada

**ID08120583 (M)**
32yrs, 5'10" , Single , Poorattathi , 9 Sevai , Bachelors.. , Project Engineer , Canada

**ID08120471 (F)**
32yrs, 5'9" , Awaiting Divorce , Not Specified , N/A Sevai , Masters Degree , IT Project.. , Singapore

**ID08120453 (F)**
31yrs, 5'4" , Single , Poorattathi , 11 Sevai , Masters Degree , Senior Manager , Canada

**ID08120442 (F)**
29yrs, 5'7" , Single , Moolam , 12 Sevai , Bachelors.. , Goverment.. , Canada

**ID08120564 (M)**
34yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator , Canada

**ID08120503 (M)**
43yrs, 5'7" , Divorced , Aswini , 6 Sevai , Masters Degree , Accountant , India

**ID08120974 (M)**
30yrs, 5'5" , Single , Poorattathi , N/A Sevai , Postgraduate.. , Instructor , Sri Lanka

**ID08120391 (F)**
28yrs, 5'2" , Single , Thiruvonam , 3 Sevai , Bachelors.. , Service Support.. , Canada

**ID08120973 (F)**
28yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Tba , United Kingdom

**ID08120939 (F)**
25yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Tba , Canada

**ID08120972 (M)**
49yrs, 5'10" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Resturant.. , Sri Lanka

**ID08120969 (M)**
30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , BSC Civil.. , Sri Lanka

**ID08120968 (M)**
30yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , High School , Store controller , Sri Lanka

**ID08120675 (F)**
29yrs, 5'4" , Single , Pooram , N/A Sevai , Bachelors.. , Student , Sri Lanka

**ID08120667 (F)**
25yrs, 5'1" , Single , Thiruvaathirai , N/A Sevai , High School , Home , Sri Lanka

**ID08120650 (F)**
26yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Law student ,Sri Lanka

**ID08120964 (M)**
42yrs, 5'7" , Single , Aswini , N/A Sevai , High School , Technical.. , Sri Lanka

**ID08120957 (M)**
31yrs, 5'6" , Single , Chithirai , 1 Sevai , Postgraduate.. , Retail Manager , Canada

**ID08120929 (M)**
33yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , High School , Contruction.. , Canada

# தமிழ்ப் பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றி! தமிழ்த்தேசியக் கட்சிகளின் அரசியல் எதிர்காலம் என்ன?

நடந்து முடிந்த இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில், முன்னெப் போதும் இல்லாத வகையில் தமிழ் தேசியக் கட்சிகளை பின்னுக்குத் தள்ளி, தேசியக் கட்சியான தேசிய மக்கள் சக்தி கூடுதல் இடங்களைக் கைப்பற்றியுள்ளது. தமிழர் பகுதிகளில் தமிழ் தேசியக் கட்சிகள் பின்னடைவை சந்திக்க என்ன காரணம்? இனி தமிழ் தேசியக் கட்சிகளின் எதிர்காலம் என்ன? இலங்கையில் பாரம்பரிய தேசியக் கட்சிகளை முறியடித்து பெருவெற்றி கண்டுள்ள தேசிய மக்கள் சக்தி, தமிழர் பகுதிகளிலும் வெற்றியை ஈட்டியது எப்படி?

## தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கு பின்னடைவு

இலங்கையில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஜனாதிபதி அநுர குமாரவின் தேசிய மக்கள் சக்தி கூடுதல் இடங்களைக் கைப்பற்றியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் மொத்தமுள்ள 6 இடங்களில் மூன்று இடங்களை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது. மீதமுள்ள மூன்று இடங்களை இலங்கை தமிழ் அரசு கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், சுயேச்சைக் குழு ஒன்று ஆகியவை பகிர்ந்து கொண்டிருக்கின்றன. தமிழரசுக் கட்சி வலுவாக உள்ளதாகக் கருதப்படும் யாழ்ப்பாணத்தில், தேசிய மக்கள் சக்தி மூன்று இடங்களைப் பெற்றதும் சுயேச்சையாக ஒருவர் தேர்வானதும் தமிழ் தேசியக் கட்சிகள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

அதே போல வன்னி தேர்தல் மாவட்டத்தில் மொத்தமுள்ள ஆறு இடங்களில் தேசிய மக்கள் சக்திக்கு இரு இடங்களும் ஐக்கிய மக்கள் சக்தி, தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி ஆகியவற்று தலா ஒரு இடமும் கிடைத்துள்ளன.

கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால், மட்டக்களப்பு மட்டுமே தமிழ் தேசிய கட்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் முடிவுகளைத் தந்துள்ளது. மொத்தமுள்ள 6 இடங்களில் தமிழரசுக் கட்சிக்கு 3 இடங்களும் தேசிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு தலா ஒரு இடமும் கிடைத்துள்ளன.

திகாடுமல்ல (அம்பாறை) தேர்தல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்திக்கு 4 இடங்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி ஆகியவற்றுக்கு தலா ஒரு இடமும் கிடைத்துள்ளன. திருகோணமலையில் மொத்தமுள்ள நான்கு இடங்களில் தேசிய மக்கள் சக்திக்கு 2 இடங்களும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இலங்கை தமிழரசுக் கட்சிக்கும் தலா ஒரு இடமும் கிடைத்துள்ளன.

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் வடக்கிலும் கிழக்கிலும் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தைத் தவிர்த்த பிற இடங்களில் தேசிய மக்கள் சக்தியே கூடுதல் இடங்களைக் கைப்பற்றியிருக்கிறது. இதற்கு முந்தைய தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய தேசிய கட்சியோ, பொதுஜன பெரமுனவோ தேசிய அளவில் பெரும்பான்மையைப் பெற்றாலும் வடக்கும் கிழக்கும் அந்த பிரதான போக்கிலிருந்து விலகியே இருந்தன. இந்த முறை அந்தப் போக்கு மாறியிருக்கிறது.

1931ல் இலங்கையில் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்தே, வடக்கு - கிழக்குப் பகுதிகள் ஒரு அரசியல் தனித்தன்மையுடன் செயல்பட்டு வந்தன. துவக்கத்தில் ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான சமஷ்டி கட்சி (தற்போது இலங்கை தமிழரசுக் கட்சி), 70களுக்குப் பின் தமிழர் விடுதலை கூட்டணி, 2001-லிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு என தமிழ் தேசியக் கட்சிகளே இந்தப் பிராந்தியங்களில் ஆதிக்கம் செலுத்தின. தேர்தல்களில் ஒன்றிரண்டு ஆசனங்கள் தென்னிலங்கைக் கட்சிகளுக்கும் அவற்று



க்கு ஆதரவான கட்சிகளுக்கும் கிடைத்தாலும், பெரும்பான்மை ஆசனங்கள் தமிழ் தேசியக் கட்சிகளுக்கே கிடைத்தன. வடக்கு - கிழக்கின் அரசியல் முகமாக இந்தக் கட்சிகளே செயல்பட்டு வந்தன. 2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் முதல் முறையாக இந்தப் போக்கு மாறத் துவங்கியுள்ளதா என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

## சித்தாந்த அரசியலா? அன்றாடப் பிரச்சனையா?

வடக்கிலும் கிழக்கிலும் இயங்கிவந்த தமிழ் தேசியக் கட்சிகள் இனப் பிரச்சனைக்கு தீர்வை மையமாகக் கொண்ட அரசியலிலேயே இத்தனை ஆண்டு காலமாக ஈடுபட்டுவந்தன. இனப் பிரச்னைக்கு எவ்விதத் தீர்வையும் முன் வைக்காத தேசிய மக்கள் சக்திக்கு (என்பிபி) இம்முறை வடக்கிலும் கிழக்கிலும் வாக்குகள் அதிகம் கிடைத்திருப்பதை வைத்துப் பார்க்கும் போது, சமூக மேம்பாடு - பொருளாதார மேம்பாடு போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஒரு அரசியலை நோக்கி வடக்கு நகர்கிறதா என்ற கேள்வியையும் எழுப்பியிருக்கிறது. ஜனாதிபதி தேர்தலில் கூட, வடக்கு - கிழக்கு மக்கள் அநுரவுக்கு கணிசமாக வாக்குகளை வழங்கவில்லை. ஆனால், இப்போது அது நடந்திருக்கிறது. சித்தாந்தங்களை



ஒருபக்கம் வைத்து விட்டு, அன்றாட வாழ்வு சார்ந்த பிரச்னைகளைக் கவனிக்க வேண்டிய காலம் வந்துவிட்டதை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும் என்கிறார் இலங்கை தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரான சி.வி.கே. சிவஞானம்.

இலங்கையில் ஒரு அரசியல் மாற்றம் எற்பட்டுத்தானிருக்கிறது. அதில் மாற்றுக் கருத்து இல்லை. உரிமை சார்ந்த விஷயங்களை பேசும் அதே நேரம், கடந்த 15 ஆண்டுகளாக என்ன செய்தீர்கள் என்று மக்கள் கேட்கிறார்கள். வெறும் தத்துவம் பேசிக் கொண்டிருக்கும் காலம் போய்விட்டது. தமிழ் தேசியம் என்று சொல்லிக் கொண்டேயிருப்பது அன்றாடப் பிரச்னைக்கான தீர்வு அல்ல. அது உரிமை சார்ந்த அரசியல் தீர்வு மட்டுமே. இப்போது வாழ்வியல் சேர்ந்த விஷயங்களை கவனிக்க வேண்டிய தேவை வந்திருக்கிறது' என்கிறார் சிவஞானம்.

ஆனால், அரசியல் நோக்கர்களில் ஆரம்பித்து பொதுமக்கள் வரை, தமிழ் தேசியக் கட்சிகளுக்குள் இருந்த பிளவே பின்னடைவுக்கான முக்கியக் காரணமாகச் சுட்டிக்காட்டுகின்றனர். யாழ்ப்பாணத்தில் இருந்த பொது மக்கள் சிலரிடம் பிபிசி பேசிய போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருந்த சச்சரவுகள், ஜனாதிபதியான இரண்டு மாதங்களில் அநுர குமார



திஸாநாயக்கவின் செயல்பாடுகளில் ஏற்பட்ட நம்பிக்கை ஆகியவற்றின் காரணமாகவே, தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்ததாகத் தெரிவித்தனர்.

தமிழ் தேசியக் கட்சிகளிடமிருந்த ஒற்றுமையின்மை, தலைமைத்துவ வெற்றிடம் ஆகியவற்றால் ஏற்பட்ட விரக்தியில் தேசிய மக்கள் சக்தியை நோக்கி மக்கள் திரும்பிவிட்டதாகச் சொல்கிறார் அரசியல் விமர்சகர் நிலாந்தன்.

இது பெரிய தமிழ் தேசியக் கட்சிகளுடைய தவறுகளின் விளைவு. தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, சிறிய தமிழ் தேசிய கட்சிகள் ஒற்றுமை இல்லாமல் இருந்தார்கள். இதன் காரணமாக பெரும் எண்ணிக்கையிலான கட்சிகளும் சுயேச்சைகளும் களத்தில் இருந்தார்கள். இதனால், மக்களின் கவனத்தை குவிக்க முடியவில்லை. மக்கள் அவ நம்பிக்கையோடு தமிழ் தேசிய அரசியலை பார்த்தார்கள். மேலும், இங்கே ஒரு தலைமைத்துவ வெற்றிடமும் இருக்கிறது. அதனை இந்தக் கட்சிகள் பொருத்தமான விதத்தில் நிரப்பத் தவறி விட்டன. இதனால் ஏற்பட்ட விரக்தியில் மக்கள் தேசிய மக்கள் சக்தியை நோக்கித் திரும்பினார்கள். சலிப்பாலும் விரக்தியாலும் திரும்பினார்களே தவிர, தேசிய மக்கள் சக்தி தீர்வைத் தரும் என நினைத்து அங்கே செல்லவில்லை. தேசிய மக்கள் சக்தி அப்படி எந்த வாக்குறுதியையும் வழங்கவில்லை' என்கிறார் நிலாந்தன்.

பலரும் சுட்டிக் காட்டுவதைப் போல, கடந்த சில ஆண்டுகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இலங்கை தமிழரசுக் கட்சியும் பல உள்மோதல்களை எதிர்கொண்டன.

2001-இல் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழரசுக் கட்சி 2004-இல் இந்தக் கூட்டமைப்பில் இணைந்தது. விரைவிலேயே அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், அந்த கூட்டமைப்பிலிருந்து விலகியது. இதற்குப் பிறகு ஈ.பி.ஆர்.எல்.எ஁ப். விலகியது. 2012-ல் புளொட் கூட்டமைப்பில் இணைந்தது. இதற்குப் பிறகு, தமிழரசுக் கட்சி, டெலோ, புளொட் ஆகியவை இணைந்து ஒரு கூட்டமைப்பாகவே தேர்தலைச் சந்தித்து வந்தன. இந்நிலையில், 2023ஆம் ஆண்டு ஜனவரியில் நடக்கவிருந்த உள்ளாட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிட தமிழரசுக் கட்சி முடிவு செய்தது. இதையடுத்து புளொட்டும் டெலோவும் தனித்துப் போட்டியிடும் நிலை ஏற்பட்டது. முடிவில் அவை, கூட்டமைப்பிலிருந்து பிரிந்து ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை அமைத்துக் கொண்டன. இந்தக் கூட்டணியில் ஈ.பி.ஆர்.எல்.எ஁ப். (சுரேஷ்) தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவை இணைந்தன.

கூட்டமைப்பு இப்படி சிதறிப் போன நிலையில், 75 ஆண்டு கால வரலாறு கொண்ட தமிழரசுக் கட்சிக்குள்ளும் பிரச்சனைகள் தலை தூக்கின. கட்சியின் தலைவர் பதவிக்கு 2023ஆம் ஆண்டில் நடந்த தேர்தலில் எம்.ஏ. சுமந்திரனைப் பின்னுக்குத் தள்ளி, சிவஞானம் சிறீதரன் அதிக வாக்குகளைப் பெற்றார். ஆனால், கட்சியின் ஒரு பிரிவினர் இதனை விரும்பாத நிலையில், கட்சி உறுப்பினர் ஒருவரால் வழக்குத் தொடரப்பட்டு, சிறீதரனின் தேர்வு நீதிமன்றத்தால் இடைநிறுத்தப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக முன்னைய தலைவர் மாவை சேனாதிராஜா தொடர்ந்து தலைவராகப் பணிபுரிய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எம்.ஏ. சுமந்திரன் தரப்பும் சிறீதரன் தரப்பும் மாறிமாறி குற்றச்சாட்டுகளை சுமத்த ஆரம்பித்தனர்.

(25ம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் நிலைக்குமா தமிழ்த்தேசியம்?



இம்முறை பாராளுமன்ற தேர்தலில் தமிழ்மக்கள் பிரதிநிதிகளாக வடக்கில் இருவரும் வடக்கை விட சனத் தொகை குறைந்த மூவினமும் ஏறக் குறைய சமமாக வாழும் கிழக்கில் ஐந்து உறுப்பினர்களும் தெரிவு செய் யப்பட்டதை தொடரந்து கிழக்கில் மாத்திரம் அநுர அலையிலும் தேசியம் காப்பாற்றப்பட்டதாக ஊடகங்கள் சிறப்பாக சமூக ஊடகங்கள் விமர்சிக்கி ன்றன

தேர்தல் காலத்தில் மேற் கொள்ளப்பட்ட பிரச்சார நடவடிக்கைகள் கிழக்கு மக்களின் அடிப்படை பிரச்சனை களான காணி,தொழில் மற்றும் ஏனைய வாழ் வாதாரங்களை உற்று நோக்கி னால் இதற்கான காரணங்களை அறிந்து கொள்ளலாம்

இலங்கையின் ஒன்பது மாகாணங்களில் கிழக்கினை தமது என முஸ்லீம்கள் உரிமை கோர தொடங்கியது அனுர தலைமையிலான ஜே வி பி திட்ட மிட்டு நீதிமன்றின் மூலம் வடகிழக்கை தனித்தனியாக பிரித்த நாளிலிருந்தே ஆரம்பமாகி விட்டது

2009 இல் ஈழப்போராட்டம் ஆயுதரீதி யாக மௌனமாக்கப்பட்ட நாளிலிரு ந்தே மிக சூட்சுமமாக செல்வந்த முஸ் லிம் நாடுகளின் நிதியுதவியுடன் தமிழரின் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பல தமிழ்க்கிராமங்கள முதலைவாய்க் குள் அகப்பட்ட இரைபோல் சிக்கி யுள்ளன

இவற்றில் பல பிரதேச விவசாய வயல் நிலங்களும் உள்ளடங்குவதோடு அரச ஆதரவுடன் காடழிப்பு செய்து பெரு மளவு காணிகளை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்ளில் தமக் குரியதாக முஸ்லீமகள் மாற்றியுள்ளனர்

கடற்றொழிலிலும் ஆழ்கடல் மீன் பிடிப்பு மீன் வியாபாரம் என்பவற்றில் இவர்களின் ஆதிக்கமே கோலோச்சு கின்றது

இவ்வாறு கிழக்கு மாகாணம் முழு வதுமாக முஸ்லிம்களின் ஆதிக்கம் காணி வாழ்வாதாரம ஆகியவற்றில் மேலோங்கி காணப்படும் வேளையில் அரச அதிகாரத்திலும் மாகாண முதலமைச்சர்களாக ஆளுநர்களாக பல முறை அவர்களே நியமிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் அமைந்திருந்தன

இவற்றினால் அரசியல் ரீதியாக விரக்தி யடைந்திருந்த தமிழ்மக்கள் கடந்த ஜனாதிபதி தேர்தலில் அநுர குமார திசாநாயக்க வெற்றி பெற்ற போது அவருக்கு கிழக்கு மாகாணத்தில் கிடைக்கப் பெற்ற வாக்குகள் முஸ்லிம் பிரதேசங்களிலிருந்தே அளிக்கப் பட்ட வையாக இருந்ததை பல சமூக ஊடக ங்கள் தெளிவாக காட்டியமை மற்றும் அவ் ஊடகங்கள் தொடர்ச்சியாக திசை காட்டி அரசை அமைக்க ஆதரவு வழங்கி வந்தமையை அவதானிக்க கூடியதாக இருந்தது

இவ்வாறான சூழ்நிலையில் பாராளு மன்ற தேர்தலுக்கான அறிவித்தல் விடுக்கப்பட்டு அதற்கான வேட்புமனு தாக்கல்செய்யப்பட்டபோது தேசிய மக்கள்சக்தி (திசைகாட்டி) கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களி லும் ஏறக்குறைய சரி பாதி முஸ்லிம் வேட்பாளர்களையே நிறுத்தியிருந்தது

இதனை தமக்கு சாதகமாக எடுத்துக் கொண்ட தமிழர்தரப்பு அரசியல்வாதி கள் தேசிய மக்கள் சக்திக்கு அளிக்கும் தமிழரின் வாக்குகளால் முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களே தெரிவு செய்யப்படுவார்கள என்ற செய்தியை மக்களுக்கு தெளிவுபடுத்தியதோடு இதனால் எதிர்காலத்தில் எற்படப் போகும் பாதிப்புகளையும் எடுத்துக்கூற தயங்கவில்லை

ஏற்கனகவே கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டதிலிருந்து நிர்வாக மற்றும் வாழ்வாதார ரீதியாக பாதிக்கப் பட்டிருந்த தமிழ்மக்கள் தாங்கள் அளிக்கும் வாக்குகள் மூலம் முஸ்லீம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு அதன்மூலம் மீண்டும் பாதிக்கப்படு வோம் என்ற பயத்தின் வெளிப்பாடே மீண்டும் தமிழரசுக் கட்சியினருக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது

எனவே வடமாகாணத்தில் பதவிகளு க்கான உட்கட்சி பூசல்கள் அதனால் ஏற்பட்ட நீதிமன்ற நடவடிக்கை களினால் தமிழரசுகட்சிமீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு கிழக்கு மாகாணத் திலும் இல்லையென எவரும் கூற முடியாது இருகோடுகள் தத்துவத்தின் படி அதனை விட முஸ்லிம்களின் ஆதிக்கம் பெரிய கோடு என்பதே உண்மையானது இதனை உணர்ந்து எதிர் காலத்திலாவது செயற்படா விட்டால் தந்தை செல்வா கூறியபடி தமிழரை அந்த இறைவன் தான் காப்பற்ற வேண்டும்

**- கௌடில்யன்**

# மரியாதை அணிவகுப்பு - வேட்டு எதுவுமில்லாமல் பாராளுமன்றத்திற்குச் சென்ற ஜனாதிபதி அநுர குமார



இலங்கையின் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் கன்னி அமர்வு நேற்று 21 நவம்பர் 2024 ஆரம்பமாகியது. இந்நிலையில், ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை முற்பகல் 11.30 மணிக்கு இடம் பெற இருந்த நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மரியாதை அணி வகுப்பு, மரியாதை வேட்டு ஏதுவுமில்லாமல் ஆரவாரமற்ற முறையில் பாராளு மன்றத்துக்கு வருகை தந்தார்.

பாராளுமன்றத்தின் பிரதான வாயிலில் இருந்து சபாநாயகர் அசோக ரங்வெல மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோர் ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தி அவரை சபா மண்டபத்துக்கு அழைத்துச் சென்றனர்.

கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்த பாராளுமன்றத்திற்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வருகை தந்த நிலையில், மரியாதை அணி வகுப்பு, மரியாதை வேட்டு ஏதுவும் இடம்பெறவில்லை என்பதுடன் ஜயமங்கல கீதமும் இசைக்கப்படாது ஆரவாரமற்ற நிலையில் ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வருகை தந்தார்.

இதேவேளை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினது முதல் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாடாளுமன்ற நூலகத்தில் நடைபெற்றது. இதன் போது தமிழரசுக் கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண் டார்கள்.



# தமிழரசுக்கட்சியைத் தொலைத்த வடக்கும் தேடி எடுத்த கிழக்கும்

- அழகு குணசீலன்-

தமிழ்த்தேசிய அரசியல் வடக்கில் மக்களால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. யாழ், வன்னி மாவட்டங்களில் தமிழரசு (2), காங்கிரஸ் (1), ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு(1), இணைந்து நான்கு ஆசனங்களை பெற்றுள்ளன. கிழக்கில், இதற்கு மாறாக மக்கள் பெரும் அங்கீகாரத்தை வழங்கியுள்ளனர். தமிழரசு மட்டும் தனித்து ஐந்து ஆசனங்கள். இந்த முடிவு தமிழ்த் தேசிய அரசியலின் காப்பாளர்கள் யார்? என்ற கேள்வியை எழுப்புகிறது.

வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், வன்னி தேர்தல் மாவட்ட முடிவுகளை பாருங்கள். யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் பழம்பெரும் தமிழரசுக்கட்சி வரலாற்றில் முதல் தடவையாக தென்னிலங்கை கட்சி ஒன்றினால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. என்.பி.பி. அளிக்கப்பட்ட வாக்குகளில் வெறும் 25 வீதத்தை பெற்று ஆறு ஆசனங்களில் 50 வீதமான மூன்று ஆசனங்களை பெற்றிருக்கிறது.

அளிக்கப்பட்ட 60 வீதமான வாக்குகளில் அரைவாசிக்கும் குறைவாகவே என்.பி.பி பெற்ற வாக்குகள் உள்ளன. ஆனால் தமிழரசுக்கட்சி (19.5) அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (8.6), சுயேட்சை குழு 17 (8.6) வீத வாக்குகளை பெற்று மிகுதி மூன்று ஆசனங்களில் தலா ஒரு ஆசனத்தை பெற்றுள்ளன. இந்த மூன்றும் பெற்ற வாக்குகள்



36.7 வீதம். இத்துடன் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு (சங்கு) பெற்ற (6.9) வாக்குகளையும் சேர்த்தால் இது 43. 6 வீதம். விகிதாசார தேர்தல் முறை சார்ந்த போனஸ் ஆசன ஒதுக்கீட்டின் அரசியல் சட்ட இருட்டறை.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகளின் அடிப்படையில் நோக்கினால் என்.பி.பி. பெற்ற 80.830 வாக்குகளோடு ஒப்பிடுகையில் மற்றைய மூன்று ஆசனங்களையும், ஆசனமற்ற சங்கு பெற்ற வாக்குகளும் சுமார் 1.40.000க்கும் அதிகமானவை. இந்த அடிப்படையில் நோக்கும் போது மக்கள் தமிழ்த் தேசிய அரசியலை உரிமைக் கோரிக்கையை நிராகரித்து விட்டார்கள் என்று நாட்டில் வீசிய என்.பி.பி. அலையின் தாக்கத்தினால் ஏற்பட்ட இந்த விளைவைக் கொண்டு சொல்ல முடியாது. ஏனெனில் கிழக்கில் மக்கள் தமிழ்த்தேசியத்தை காப்பாற்றியிருக்கிறார்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் தென்னிலங்கை கட்சி ஒன்று இந்த வெற்றியை பெறுவதற்கு கடந்த பதினைந்து ஆண்டுகளாக தமிழ்த்தேசிய அரசியலில் ஏற்பட்ட பின்னடைவு ஒரு முக்கியமான காரணம். அதேவேளை இணக்க அரசியல், அபிவிருத்தி பேசிய ஈ.பி.டி.பி. அங்கயன் அணி, மற்றும் தென்னிலங்கை கட்சிகளையும் அவர்கள் தமிழ்த்தேசிய கட்சிகளை விடவும் மிக மோசமாக நிராகரித்துள்ளனர், என்பதும் மறுப்பதற்கில்லை.

தமிழரசுக்கட்சியின் கோரிக்கையின் பேரில் சஜித் பிரேமதாசவுக்கும், ஈ.பி.டி.பி.யின் கோரிக்கையின் பேரில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் கொள்கை அடிப்படையிலானதல்ல என்பதையும் இந்த முடிவு காட்டுகிறது. என்.பி.பி.யின் தேர்தல் கால நடவடிக்கைகளும், வாக்குறுதிகளும் நீண்ட காலமாக தமிழ்த்தேசிய, மற்றும் இணக்க மற்றைய தென்னிலங்கை கட்சிகளின் மீதான நம்பிக்




கையை இழக்கச் செய்து புதிய ஒரு வாய்ப்பை என்.பி.பி.க்கு வழங்கிப் பார்க்க முன் வந்ததன் ஒரு விளைவு. எதிர்காலத்தில் தமிழ்த்தேசிய கட்சிகள் இழந்த நம்பிக்கையை எப்படி மீளப் பெறப் போகின்றன என்பதும், வழங்கிய வாக்குறுதிகளை என்.பி.பி. எவ்வாறு காப்பாற்றப் போகிறது என்பதுமே யாழ்ப்பாணத்தில் இந்த கட்சிகளின் இருப்பை தீர்மானிப்பதாக அமையும். ஆனால் யாழ். தமிழ்த்தேசிய கோட்டைக்குள் என்.பி.பி. நடாத்தியிருக்கின்ற இந்த ஊடுருவல் தாக்குதல் தமிழ்த் தேசிய அரசியலின் தற்காலிக நிராகரிப்பு என்று கொண்டாலும் குறைத்து மதிப்பிடக்கூடிய ஒன்றல்ல.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசிய அரசியல் மூன்றாவது இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளது. தமிழரசுக்கட்சி சுமார் 30.000 வாக்குகளையும் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சுமார் 21.000 வாக்குகளையும் பெற்று தலா ஒரு கதிரையை பிடித்துள்ளன. ஆறு ஆசனங்களில் என்.பி.பி. இரண்டு, ஐக்கிய மக்கள் சக்தி ஒன்று, சிறிலங்கா தொழிற்கட்சி ஒன்று என மற்றைய நான்கு ஆசனங்களையும் பெற்றுள்ளன. இறுதி யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட வன்னி நிர்வாக மாவட்டங்களான மன்னார், வவுனியா, முல்லைத்தீவில் இது தமிழ்த்தேசிய அரசியல் தோல்வியாக தோன்றினும் இங்கு வன்னியின் சிங்கள, முஸ்லீம், மலையக மக்களின் வாக்காளர் பங்களிப்பு இந்த தேசிய கட்சிகளின் வெற்றிக்கு முக்கிய காரணமாக அமைகிறது.

மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் முடிவானது சகல எதிர்பார்ப்புக்களையும் நிராகரித்து தமிழ்த்தேசிய அரசியல் நிலைப்பாட்டிற்கு மக்கள் மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்கியிருக்கிறார்களா ? என்ற கேள்வியை எழுப்புவதாக உள்ளது. பிறந்த வீட்டில் தோற்ற தமிழரசு வளர்ந்த வீட்டில் வெற்றி பெற்றுள்ளது. 98.975(33.8) வாக்குகளை வழங்கி மூன்று ஆசனங்களுக்கு வழி வகுத்ததன் மூலம் இலங்கையின் அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் என்.பி.பி. வகித்த முதன்மை நிலையை மக்கள் தமிழரசுக்கட்சிக்கு வழங்கி சாதனை படைத்திருக்கிறார்கள்.

இந்த சாதனையும், என்.பி.பி.யின் புது வரவும், கவர்ச்சியும் ரி.எம்.வி.பி. யின் ஆசன இழப்புக்கு காரணமாக அமைந்துள்ளது. என்.பி.பி. தமிழ்த்தேசிய அரசியல் மீதான வெறுப்பை வடக்கு கிழக்கில் அறுவடை செய்துள்ள நிலையில் மட்டக்களப்பில் அது சாத்தியப்படவில்லை. ஆனால் ஊழலுக்கு எதிராகவும், ரணில் -ராஜபக்ச ஆட்சியின் பங்காளராகவும் மட்டக்களப்பில் என்.பி.பி பிள்ளையானை 55.498 (19.3) வாக்குகளை பெற்று தோல்வியடையச் செய்துள்ளது.

கடந்த தேர்தலில் பெற்ற வாக்குகளில் ரி.எம்.வி.பி. சுமார் 50 வீதத்திற்கும் அதிகமாக இழந்து 31, 286(10.9) வாக்குகளை மட்டுமே பெற்று நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. தனியாக மட்டக்களப்பு மாவட்டத்தை மட்டும் முதன்மைப்படுத்திய ரி.எம். வி.பி.க்கு எதிர்காலம் குறித்த ஒரு பெரும் சவாலாக இது இருக்கப் போகிறது. என்.பி.பி. தமிழரசுக்கட்சி அலைக்கு மத்தியிலும் முஸ்லீம் காங்கிரஸ் 40.139 (14.0) வாக்குகளை பெற்று தனது பிரதிநிதித்துவத்தை காப்பாற்ற முடிந்துள்ளது.

திருகோணமலையில் என்.பி.பி., எஸ்.ஜே.வி.யினால் மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்ட தமிழரசுக்கட்சி 34.168 (17.0) வாக்குகளை பெற்று ஒரு இடத்தை பெற்றுள்ளது. எனினும் இது கடந்த தேர்தலிலும் மூன்றாவது இடத்தில் சம்பந்தர் தலைமையில் பெற்ற வாக்குகளை விடவும் (39.570 –18.5 வீதம்) சுமார் 5.000 வாக்குகள் குறைவானது. அதுவும் சங்கு அணியுடன் போட்டி தவிர்ப்பு செய்து ஓரணியில் போட்டியிட்டதனாலேயே திருகோணமலையில் தமிழ்ப்பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட்டுள்ளது. இல்லையேல் இது சாத்தியப்பட்டிருக்க வாய்ப்பில்லை.

அம்பாறையில் வீடும், சங்கும் தனித்து போட்டியிட்ட போதும் தமிழரசுக்கட்சி 33.632 (9.27) வாக்குகளை பெற்று வெற்றி அடைந்துள்ளது அம்பாறை மாவட்ட தமிழர்களுக்கு ஒரு நற்செய்தி. சங்கு, படகு, கார் , சைக்கிள் வீணை போன்றவை அங்கு போட்டியிட்ட போதும் தமிழரசுக்கட்சியின் வெற்றியை அவற்றால் தடுக்க முடியவில்லை. இவை தேசிய பட்டியல் வாக்குச் சேகரிப்பை இலக்காகக் கொண்டே போட்டியிட்டன.

தமிழரசுக் கட்சி கடந்த தேர்தலில் இழந்த பிரதிநிதித்துவத்தை இம்முறை பெற்றுள்ளது. கடந்த தேர்தலில் தமிழரசு, கருணா தரப்பு போட்டி பலமாக இருந்ததால் தமிழர் வாக்குகள் ஏற்கக்குறைய சமமாக பிரிக்கப்பட்ட நிலையில் வெற்றி பெறமுடியவில்லை. இம்முறையும் தமிழ் வாக்காளர்கள் தொகையுடன் ஒப்பிடுகையில் தமிழரசு பெற்ற வாக்குகள் குறைவானவையே.

காஸ் சிலிண்டர் 33.544 (9.24) வாக்குகளை பெற்றுள்ளது. ஆக, 80 வாக்குகளே தமிழரசுக்கட்சியின் வெற்றியை தீர்மானித்துள்ளன. இல்லையேல் 2020 கதையே 2024 கதையாகவும் இருந்திருக்கும்.

மொத்தத்தில் என்.பி.பி. அலையில் தமிழ்த்தேசிய அரசியல் அள்ளுண்டு போய் விட்டது என்று சொல்லுவதற்கு இந்த தேர்தல் முடிவுகள் மட்டும் போதுமானவை அல்ல. என்.பி.பி.யின் எதிர்கால செயற்பாடும், வாக்குறுதிகளும், இனப்பிரச்சினைக்கான தீர்வு அணுகுமுறைகளுமே அதனை தீர்மானிப்பதாக அமையும்.

ஒப்பீட்டளவில் பிராந்திய, சிறிய முஸ்லீம் கட்சிகளை விடவும் குறிப்பாக அம்பாறையில் அதாவுல்லாவின் மக்கள் காங்கிரஸ் (மயில்) 33. 911(9.34) வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளது. இந்த நிலையில் ஈ.பி.டி.பி, ரி.எம்.வி.பி. என்பனவற்றால் அதனை சாதிக்க முடியவில்லை.

தேசிய பட்டியல் கணிப்பீடு தமிழரசுக் கட்சிக்கு ஒரு ஆசனத்தை ஒதுக்கியுள்ளது. தமிழரசு வடக்கு கிழக்கில் பெற்ற ஏழு ஆசனங்கள் இத்துடன் எட்டாகியுள்ளதுஇதில் மூன்று மட்டக் களப்பு (3) அம்பாறை(1). திருகோணமலை (1) ஐந்து ஆசனங்கள். பாராளுமன்ற குழுவில் கிழக்கு மாகாண உறுப்பினர்களே அதிகம் 5+2=7 ( 7.5)

தமிழரசுகட்சிக்கு வடக்கு கிழக்கில் கிடைத்த மொத்த வாக்குகள் 2.57.000.

இதில் வடக்கில் 93.000. மட்டக் களப்பில் மட்டும் தமிழரசு பெற்ற 96.975 வாக்குகளையும் விடவும் இவை குறைவானவை.

மொத்தமாக கிழக்கில் தமிழரசு 1.62. 000 வாக்குகளை பெற்றுள்ளது. வடக்கு தமிழர்கள் அநுர அலையில் அள்ளுண்டு போன நிலையில் தமிழ்த் தேசிய அரசியலின் காவலர்களாக கிழக்கு தமிழ் மக்களே உள்ளனர்.

இந்த நிலையில்.......!


தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற குழுத்தலைவர் பதவி கிழக்கிற்கு சாணக்கியனுக்கு வழங்கப்படுமா...?

தமிழரசுக்கட்சியின் தேசியப்பட்டியலுக்கு காரணம் கிழக்கு மக்கள் அந்த ஆசனம் கிழக்கிற்கே வழங்கப்படுமா?


தமிழரசுக்கட்சிக்கு கிழக்கு தலைமை தாங்குமா?

இந்த கேள்விக்கான பதிலே என்.பி.பி. பேசிய மாற்றத்திற்கான அரசியலை நெல்லுக்கிறைத்த நீராய் புல்லுக்கும் அங்கு புசியச் செய்யும்.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்திலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் இருந்த தடுமாற்றம் நீங்கும். சாமர்த்தியமாக எதையும் சமாளிக்கும் துணிச்சல் வரும். எதிர்ப்புகள் குறையும். தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடக்கும். எதிர்பார்த்த லாபம் இருந்தாலும் தொழில் தொடர்பான செலவும் கூடும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றமான பலன் காண்பர். புதிய வேலை பற்றிய சிந்தனை அதிகரிக்கும்.





ரிஷபராசி அன்பர்களே! அதிக கோபத்தால் வீண்பகை உண்டாகலாம். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. ஆடம்பர செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் பணிச்சுமை, இடமாற்றம், அலைச்சல் போன்றவை இருக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். பிள்ளைகள் பெருமை சேர்ப்பார்கள்.





மிதுனராசி அன்பர்களே! காரியங்கள் தாமதமாக நடந்தாலும் வெற்றிகரமாக நடக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். புது வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக முடியும். குடும்பத்தில் இருப்ப வர்களின் செய்கைகள் உங்களது கோபத்தை தூண்டுவதாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படும். பிள்ளைகளை அனுசரித்து செல்வது நல்லது.




கடகராசி அன்பர்களே! பிடிவாதத்தை விட்டு விடுவது காரிய வெற்றிக்கு உதவும். கடிதப் போக்குவரத்து நன்மை தரும் தொழில் வியாபாரத்தில் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. எதிர் பார்த்த பணம் கைக்கு வர தாமதம் ஆகலாம். உத்யோகத்தில் இருப்ப வர்களுக்கு நிதானம் தேவை. சக ஊழியர்களுடன் சாமர்த்தியமாக பழகி காரிய அனுகூலம் அடைவீர்கள். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் தீரும. உறவினர்கள் தேடி வருவார்கள்.





சிம்மராசி அன்பர்களே! எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணியபடி செயல்களை செய்து காரிய வெற்றி காண்பீர்கள். ஆன்மிக பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். திருமண முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரம் சுமாராக இருக்கும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த மனக் கிலேசங்களில் தெளிவான நிலை ஏற்படும்.




கன்னிராசி அன்பர்களே! காரிய தாமதம் ஏற்படும். வீண் மனக் கவலை நீங்கும். வாகனங்களில் செல்லும்போது கவனம் அவசியம். நண்பர்கள் மூலம் கிடைக்க வேண்டிய உதவிகள் தாமதப்படும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். உத்யோகத்தில் தடங்கல்கள் ஏற்படும்.





துலாம்ராசி அன்பர்களே! எதிர்ப்புகள் மறையும். பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்புக் கரம் நீட்டுவார்கள். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகள் குறையும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது.





விருச்சிகராசி அன்பர்களே! மன உறுதி அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களை அடைவதில் இருந்த தடைகள் நீங்கும். உயர் நிலையில் உள்ளவர்களுடன் இருந்து வந்த மன வருத்தம் நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைய வேண்டி இருந்தாலும் முடிவில் லாபம் கிடைக்கும். எதிர்பார்த்த கடன் வசதி கிடைக்கும். தொழில் வியாபாரத்திற்கு புதியதாக இடம் வாங்குவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலை, வேலை பளுவை சந்திக்க நேரிடும்.







தனுசுராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்த பிரச்னை குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். வாக்கு வன்மை நன்மையை தரும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் நீங்கும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் எதையும் வெளிக்காட்டாமல் இன்முகம் கொடுத்து பேசுவார்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த வருத்தங்கள் நீங்கும்.




மகரராசி அன்பர்களே! முடங்கி கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பிடிக்கும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு கை கொடுப்பர். தொழில் எதிர்பார்த்த அளவு நடக்கா விட்டாலும், லாபம் குறையாமல் இருக்கும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கும். திறமையான செயல்பாட்டால் பாராட்டு கிடைக்கும். குடும்பத்தில் எதிர்பாராத விருந்தினர் வருகையால் வாக்குவாதங்கள் ஏற்படலாம்.




கும்பராசி அன்பர்களே! எடுத்துக் கொண்ட முயற்சிகளில் காரிய தடை தாமதம் ஏற்படும் உஷ்ண சம்பந்தமான நோய் ஏற்படும். வீண் வழக்கு விவகாரங்கள் வரலாம். எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது. பார்ட்னர்களுடன் சேர்ந்து தொழில் செய்பவர்கள் கவனமாக செயல்படுவது நல்லது. கடன் தொல்லை தலை தூக்கலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகாரம் கிடைக்கும்.




மீனராசி அன்பர்களே! மற்றவர்களின் உதவியால் காரிய அனுகூலம் உண்டாகும். இதுவரை இருந்த தொல்லைகள் நீங்கும். நீண்ட தூரப் பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் தைரியம் பிறக்கும். வாக்கு வன்மை ஆதாயத்தை பெற்று தரும். தொழில் வியாபாரத்தில் இருப்ப வர்கள் கூடுதல் செலவை சந்திக்க நேரிடும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது வேகமாகும். தேவையான பணஉதவி கிடைக்கலாம். நிலுவையில் உள்ள பணம் வரும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# பிராந்திய அரசியலின் முடிவும் தேசிய அரசியலின் தொடக்கமும்

(17ம் பக்கத் தொடர்ச்சி) வந்த அரசியற் கட்சிகளின் தவறுகளுக்கான கூட்டுத் தண்டனையாகவே தற்போதைய தேர்தல் முடிவுகள் அமைந்திருக்கின்றன. இது கூடச் சடுதியாக ஏற்பட்ட ஒன்றல்ல. இதற்கு முன் கடந்த தேர்தல்களின் போதே இந்த வீழ்ச்சியை மாற்றத்தை மக்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

கடந்த தேர்தல்களில் யாழ்ப்பாணத்தில் டக்களஸ் தேவானந்தா, விஜயகலா மகேஸ்வரன், அங்கயன் ராமநாதன் போன்றோரும் கிழக்கில் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), வியாழேந்திரன் போன்றோரும் இதற்கான அடையாளங்களாகும்.

அதைக் கூட இந்தத் தலைமைகள் எதுவும் கணக்கிற் கொண்டு திருந்திக் கொள்ளவில்லை. விளைவு இப்போது ஒட்டு மொத்தமாக ஒரு பாரிய வீழ்ச்சியையும் மாற்றத்தையும் சந்திக்க வேண்டி நேர்ந்திருக்கிறது. ஆக பிராந்திய அரசியலைப் பலவீனப் படுத்தியதில் முக்கியமான பங்கு அந்த அந்த அரசியற் குறைபாட்டுக்கும் அரசியலைப் பிரதிநிதித்துவப்படுத்தியோருக்கும் அதை மேற்கொண்டோருக்குமே உரியது. பழியை பிறரின் மீது போட்டுத் தப்பி விட முடியாது.

இப்போது நிலைமை கையை மீறி விட்டது. இது பிராந்திய அரசியலைக் கடந்த தேசியவாத அரசியலின் காலம். மக்கள் இலங்கை முழுவதற்குமான பொதுப்பிரச்சினைகளில் ஒன்றிணையத் தொடங்கி விட்டனர். அவர்களை நேரடியாகத் தாக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள், ஊழல், அதிகார துஸ்பிரயோகம், சூழல் பாதுகாப்பு, சமத்துவமின்மை, பன்மைத்துவத்துக்கான இடம், வேலை வாய்ப்பு போன்றவற்றையே தமது அரசியற் பரப்பாகக் கொள்ளத் தொடங்கி விட்டனர். அதனால் அதற்குரிய அரசியலையும் அரசியற் தரப்பையும் அவர்கள் தெரிவு செய்துள்ளனர்.

இதிற் கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான விடயம் ஒன்று உள்ளது அரசியலில் தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய புதிய தலைமுறை உருவாகி விட்டது. அதனுடைய உணர்நிலைகளும் பிரச்சினைகளும் வேறானவை. அந்தத் தலைமுறை முதல் தலைமுறையினரைப் போலவே சிந்திக்கும் என்றில்லை. ஆகவே இந்தப் பின்னணியில் தெரிவு செய்யப்பட்ட தரப்பு (NPP) அதற்கான உத்தரவாதத்தோடு நடந்து கொள்ளுமா? அவர்களுடைய தேவைகள் எவ்வளவு தூரம் நிறைவேற்றப்படும்? அவர்களுடைய பிரச்சினைகள் எவ்வளவுக்குத் தீர்த்து வைக்கப்படும் என்பதைச் சில ஆண்டுகள் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

புதிய ஆட்சித் தரப்பு இதுவரையிலும் அதிகாரத்தில் இருக்காதது. ஆட்சியதிகாரத்துக்கு வெளியே இருந்து அதிகாரத் தரப்பின் தவறுகளையும் ஆட்சிக்குறைபாடுகளையும் கண்டு, விமர்சித்து வந்தது.

அதனால் தன்னுடைய ஆட்சியையும் தான் பெற்றுள்ள அதிகாரத்தையும் முடிந்த வரையில் அது மிகப் பொறுப்புடன் நிர்வகிக்கும் என நம்ப முடியும். ஆனாலும் அதனுடைய ஆட்சி எவ்வாறு அமையும் என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது. ஆனால் அவர்கள் (NPP ) வந்த வழிகளின் சுவட்டைக் கொண்டு மதிப்பிடும் போது, மக்களுக்கான ஒரு நல்லாட்சியை நடைமுறைப்படுத்துவதில் கூடுதலான அக்கறை கொள்ளப்படும் என நம்பலாம்.

இந்த நம்பிக்கை வெற்றியளிக்குமானால் பிராந்திய அரசியல் முடிவுக்கு வந்து விடும். அதாவது, தற்போது உருவாகியிருக்கும் தேசிய அரசியலே மேலும் வலுப் பெறும். குறுந்தேசிய அரசியல் இல்லாதொழியும். எந்த வழியிலாயினும் மக்கள் மீட்சியடைவதே அரசியற் சிறப்பாகும்.

# தமிழரசின் எதிர்காலமும் சுமந்திரன்.....

(7ம் பக்கத் தொடர்ச்சி) முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர இணக்கப் போக்கை கடைப்பிடிப்பதிலும் தலைமைத்துவத் தகராறை முடிவுக்கு கொண்டு வருவதிலும் சிறீதரன் அக்கறை காட்ட வேண்டிய நேரம் வந்து விட்டது. நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் வழக்குகளை விலக்கிக்கொள்ளச் செய்து கட்சியின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்பதற்கான வழிமுறைகளை அவர் கடைப்பிடிக்கவேண்டும். தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் பாராளுமன்றத்துக்கு தெரிவானவர்களில் அனுபவம் கூடியவர் என்ற முறையில் அதன் பாராளுமன்றக் குழுவின் தலைவராக பதவியேற்று தனது தலைமைத்துவ ஆளுமையை சீறீதரன் நிரூபிக்க வேண்டும்.

சிந்தித்துச் செயல்படா விட்டால் எதிர்காலத் தேர்தல்களில் பாதிப்பு மேலும் மோசமாகலாம். சுமந்திரனும் இது விடயத்தில் தனது பக்குவத்தை வெளிப்படுத்துவார் என்று நம்புகிறோம்.

# திசை காட்டுமா திசை காட்டி?

(9ம் பக்கத் தொடர்ச்சி) கொள்ள முடியும் என்பதற்கு இலங்கையில் உதாரணங்கள் உண்டு. இனவாதம் தன்னை புதிய நிலைமைகளுக்கு ஏற்ப சுதாகரித்துக் கொள்ளும். சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பானது ஆட்சிகளை மாற்று வதன் மூலம் தன்னைத் தக்கவைத்துக் கொள்ளும்.எனவே இனவாதம் பேசப்படாத தேர்தல் களம் என்பதை வைத்து நாட்டில் இனவாதம் இல்லை என்ற முடிவுக்கு வருவது அப்பாவித்தனமானது.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் இனவாதத்தை தூக்கி எறிந்து விட்டு தமக்கு வாக்களித்ததாக ஜேவிபியின் மூத்த தலைவர் ரில்வின் சில்வா கூறியிருக்கிறார். அது தவறு. தமிழ் மக்கள் இனவாதத்தைத் தூக்கி எறிந்து விட்டு வாக்களிக்கவில்லை. இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்றும் வாக்களிக்கவில்லை. தமிழ் கட்சிகளின் மீது ஏற்பட்ட சலிப்பினால் வாக்களித்தார்கள். வெறுப்பினால் வாக்களித்தார்கள். தமிழ் மக்களைத் தமிழ்க் கட்சிகள் ஒரு தேச மாகத் திரட்டத் தவறியதனால் வாக்களித்தார்கள் என்பதே சரி.

மேலும் ரில்வின் சில்வா தமிழ் அரசியலை இனவாதமாக மதிப்பிறக்கம் செய்திருக்கிறார். அது இனவாதம் அல்ல. சிங்கள மக்களின் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதமும் தமிழ் மக்களின் தமிழ்த் தேசிய வாதமும் ஒன்று அல்ல. சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதமானது ஒடுக்கும் சித்தாந்தமாகும். தமிழ்த் தேசியவாதமானது -அதில் ஆயிரம் விமர்சனங்கள் இருந்தாலும்-ஒடுக்கு முறைக்கு எதிரான ஒரு சித்தாந்தமாகும். தமிழ் மக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்வதற்காகத் தான் போராடுகிறார்கள். தங்களுடைய இன அடையாளத்தை அழிக்கும் ஒரு பெரிய இனத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுகிறார்கள். தங்களை ஒரு தேச மாகவும் தேசிய இனமாகவும் நிலை நிறுத்துவதற்காக, தங்களுடைய தேசிய இரு ஷப்பை இலங்கைத்தீவில் பாதுகாப்பதற்காகவும் பலப்படுத்துவதற்காகவுந் தான் அரசியல் செய்கிறார்கள். அது இனவாதமாகாது. ஜேவிபி அதை இனவாதமாகக் கருதுமாக இருந்தால் இக்கட்டுரையில் ஏற்கனவே கூறப்பட்டது போல, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் திடசித்தம் அவர்களிடம் இல்லை என்று பொருள். அதை விளங்குமளவுக்கு அவர்களுடைய தமிழ் நண்பர்களுக்குத் தெளிவு இல்லை என்று பொருள்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
HomeLife Higher Standards
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*

நாளை பற்றிய கவலையை தவிர்க்க நம்பிக்கையானது
காப்புறுதி ஒன்றே!
• Life Insurance
• Critical Illness Insurance
• Disability Insurance
• Mortgage Insurance
• Super Visa Insurance
• RESP, RRSP and TFSA
Arun KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group
Canada Protection Plan
Assumption Life
Foresters
KABIS

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
உங்கள் சகல City Permit தேவைகளுக்கு
Subramaniam Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com


# வரலாற்றுச் சாதனைகளைக் குவித்துள்ள தேசிய மக்கள் சக்தி!

## ஒரு அரசியல் கட்சி தேர்தலில் இத்தனை சாதனை படைத்தது முதல் முறை!

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவரை இல்லாத பல சாதனைகளை படைத்து தேசிய மக்கள் சக்தி இவ்வருட பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றதுடன், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பலத்துடன் உள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி நேற்று 6,863,186 வாக்குகளைப் பெற்று வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பதிவு செய்தது. இந்த நாட்டின் வரலாற்றில் பொதுத் தேர்தலில் கட்சியொன்று பெற்ற அதிகூடிய வாக்குகள் இதுவாகும்.

முன்னதாக 2020இல் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன 6,853,690 வாக்குகளைப் பெற்றிருந்ததுடன், இம்முறை தேசிய மக்கள் சக்தி அந்த எண்ணிக்கையை முறியடித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி இந்த ஆண்டு 61.56 சதவீத வாக்குகளைப் பெற்ற அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 2010 இல் 59.09 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தது. இதன்படி, விகிதாசார வாக்களிப்பு முறையில் தேசிய மக்கள் சக்தி பெற்ற வாக்கு வீதம், இதுவரை பொதுத் தேர்தலில் கட்சியொன்று பெற்ற அதிகூடிய வாக்கு வீதமாக வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 225 ஆசனங்களில் 159 ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி பெற்றுள்ளது. பொதுத் தேர்தலில் ஒரு கட்சி பெற்ற அதிகூடிய பாராளுமன்ற ஆசனம் இதுவாகும். இதற்கு முன்னர் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன 145 பாராளுமன்ற ஆசனங்களை வென்றிருந்தது.




தேசிய மக்கள் சக்தி வென்ற 159 உறுப்பினர் பதவிகளில் மாவட்ட அளவில் வெற்றி பெற்ற 141 ஆசனங்களும் 18 தேசியப்பட்டியல் உறுப்பினர் ஆசனங்களும் அடங்கும்.

22 தேர்தல் மாவட்டங்களில் 21 மாவட்டங்களில் அதிகாரத்தை ஒருங்கிணைத்து பெரும்பான்மை இடங்களைப் பெற்றனர். பொதுத் தேர்தலில் கட்சியொன்று அதிகூடிய மாவட்டங்களை வென்றுள்ளதுடன், இதற்கு முன்னர் 2010ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே இந்த சாதனையைப் படைத்திருந்தது. அப்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 19 மாவட்டங்களில் வெற்றி பெற்றது. மேலும், தேசிய மக்கள் சக்தி 151 தொகுதிகளில் வெற்றி பெற்றது, இது ஒரு கட்சி பொதுத் தேர்தலில் அதிக தொகுதிகளை வென்ற முதல் சந்தர்ப்பம் ஆகும், இது முன்னர் 2010 இல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் இருந்த சாதனையாகும். அதந்கமைய, 136 இடங்களை பெற்றிருந்தது.

அத்துடன், இவ்வருட பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு தவிர்ந்த வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றமை மிகவும் தனித்துவமான நிகழ்வாகும். பல வருடங்களாக தமிழ் அரசியல் கட்சிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கு, கிழக்கில் தென்னிலங்கையில் இருந்து அரசியல் கட்சியொன்று ஆட்சியை கைப்பற்றுவது இதுவே முதல் தடவையாகும்.

அத்துடன், இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கிடையில் அதிக வாக்கு வித்தியாசத்தை ஏற்படுத்திய தேர்தலாகவும் இவ்வருட தேர்தல் பதிவாகியுள்ளது. இம்முறை தேசிய மக்கள் சக்தி 6,863,186 வாக்குகளையும், இரண்டாவதாக வந்த ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு 1,968,716 வாக்குகளையும் பெற்றுள்ளது. இரு கட்சிகளுக்கிடையிலான வித்தியாசம் 4,894,470 ஆகும்.

கடந்த 2020 பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 6,853,690 வாக்குகளையும், இரண்டாவது இடத்தில் இருந்த ஐக்கிய மக்கள் கூட்டமை 2,771,980 வாக்குகளையும் பெற்றுள்ளது. அந்த கட்சிகளுக்கிடையிலான வித்தியாசம் 4,081,710 ஆகும்.

அத்துடன், தேசியப்பட்டியலின் வெற்றியுடன் தேசிய மக்கள் (16ம் பக்கம் பார்க்க)


வானிலை கணிக்கக்கூடியது ஆனால்
உங்கள் எதிர்காலம் அப்படியல்ல
எங்கள் நோக்கம் உங்கள்
எதிர்காலத்தை பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE | CRITICAL ILLNESS | DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE | SUPER VISAS | RRSP & RESP
WE TRULY CARE FOR YOU & YOUR LOVED ONES!
647 401 5800 ajithinsurance.ca ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4

# தமிழ்ப் பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றி! தமிழ்த்தேசியக் கட்சிகளின் அரசியல் எதிர்காலம் என்ன?

(19ம் பக்கத் தொடர்ச்சி)

### எந்த வேட்பாளருக்கு ஆதரவு என்ற குழப்பம்

இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் கட்சிக்குள் குழப்பம் ஏற்பட்டது. பொது வேட்பாளரை ஆதரிக்கலாம் என்றார் சிறீதரன். ஆனால், அது தொடர்பாக கட்சி முடிவெடுக்கும் முன்பே பொது வேட்பாளரை ஆதரித்து பிரசாரத்தில் இறங்கினார் அவர். இது கட்சிக்குள் சிறீதரன் – சுமந்திரன் என ஒரு பெரிய பிளவை ஏற்படுத்தியது. மற்றொரு பக்கம், கட்சியின் தலைவராக இருந்த மாவை சேனாதி ராஜா ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவரை ஆதரித்து பேட்டிகளை அளித்தார்.

இந்த முறை நாடாளுமன்றத் தேர்தல் வந்த போது வேட்பாளர் தேர்வு தொடர்பாக பல விவாதங்கள் தமிழரசுக் கட்சிக்குள் எழுந்தன. முடிவில் தமிழரசுக் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினரும் கொழும்புக் கிளையின் தலைவருமான சட்டத்தரணி கே.வி. தவராசா கட்சியிலிருந்து விலகி சுயேச்சைக் குழுவாக போட்டியிட்டார். இதுவும் வாக்குகளைப் பிரித்தது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசிய கட்சிகளின் சார்பில் வடக்கிலும் கிழக்கிலும் 13 உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் பத்து பேரும் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் சார்பில் இருவரும் தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் ஒருவரும் நாடாளுமன்றம் சென்றனர்.

ஆனால், இந்த முறை தமிழரசு கட்சி சார்பில் 8 பேரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சார்பில் ஒருவர், தமிழ் காங்கிரஸ் சார்பில் ஒருவர் என 10 பேரே நாடாளுமன்றம் செல்கின்றனர்.

மற்றொரு பக்கம் கடந்த முப்பது ஆண்டுகளாக தேர்தலில் வென்றுவந்த ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் கடந்த தேர்தலில் பெருமளவு விருப்பு வாக்குகளைப் பெற்ற அங்கஜனும் இந்த முறை தோல்வியடைந்துள்ளனர்.

தமிழரசுக் கட்சியைப் பொருத்தவரை, கூட்டமைப்பில் இருந்த போது தங்கள் கட்சிக்கு ஆறு இடங்களே கிடைத்த நிலையில் தற்போது எட்டு இடங்களைக் கைப்பற்றியதால் இதனைப் பின்னடைவாகப் பார்க்க முடியாது என்கிறது அக்கட்சி.

தேசிய மக்கள் சக்தி பெற்ற வெற்றியை எங்களுக்கான பின்னடைவாக நான் பார்க்கவில்லை. இதற்கு முன்பும் டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் கூட்டமைப்பை எதிர்த்து வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஏற்கனவே டக்ளசிற்கும் அங்கஜனுக்கும் பிற கட்சிகளுக்கும் கிடைத்த வாக்குகள் என தமிழ் தேசியக் கட்சிகளுக்கு எதிராக சுமார் ஒரு லட்சம் வாக்குகள் இருந்திருக்கின்றன. ஆனால் இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு 80 ஆயிரம் வாக்குகள் தான் கிடைத்திருக்கின்றன. இந்த விகிதாச்சார தேர்தல் முறையில், சரியாக வாக்குகளைச் செலுத்த வைத்ததன் மூலம் அவர்கள் ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கிறார்கள். எங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு அதை பிரித்ததால், இந்தப் பின்னடைவு வந்தது. இல்லாவிட்டால் எங்களுக்கு இடங்கள் அதிகமாகக் கிடைத்திருக்கும்' என்கிறார் சிவஞானம்.

இதே கருத்தையே எதிரொலிக்கிறார் தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்ட




சட்டத்தரணி வி. மணிவண்ணன். தமிழ் தேசிய கட்சிகள் பல அணிகளாகப் பிரிந்திருந்தது தான் எங்களுக்கு பின்னடைவு போன்ற தோற்றத்தைக் காட்டுகிறது. ஒன்றிரண்டு அணிகளாக இருந்தவர்கள், ஐந்துக்கும் மேற்பட்ட அணிகளாகப் பிரிந்தது, தமிழ் தேசிய சக்திகள் தோற்றது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த காலங்களில் அரசாங்கத் தரப்புடன் இருந்த டக்ளஸ், அங்கஜன் ராமநாதன் ஆகியோருக்கு 94.000 வாக்குகள் கிடைத்தன. இந்த முறை டக்ளஸோ, அங்கஜனோ ஆட்சி அதிகாரத்தில் இருக்கப்போவதில்லை என்பது தெரிந்ததால், அவர்களுக்கு வாக்களித்தவர்கள் மொத்தமாக என்பிபிக்கு வாக்களித்து விட்டனர். அதிக வாக்குகளைப் பெற்ற கட்சி என்பதால் போனசாக ஒரு இடமும் கிடைத்தது' என விளக்குகிறார் வி. மணிவண்ணன்.



### வடக்கில் நடந்திருப்பது வரலாற்று மாற்றமே

ஆனால், இப்போது வடக்கில் நடந்திருப்பது ஒரு வரலாற்று மாற்றம் என்கிறார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி அகிலன் கதிர்காமர்.

'இது ஒரு வரலாற்று ரீதியான மாற்றம். வடக்கில் உள்ள இரு தேர்தல் மாவட்டங்களிலும் ஒரு தேசியக் கட்சி பெரும்பான்மையைப் பெற்றிருக்கிறது. உள்நாட்டு யுத்தம் முடிந்த பொழுது உண்மையில் அங்கு ஒரு மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு அரசியல் கட்டமைப்பு இருக்கவில்லை. விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புத்தான் இருந்தது. அது ஒரு சில நபர்களைக் கொண்ட அமைப்பே தவிர, மக்கள் இயக்கம் அல்ல. இப்படித்தான் 15 ஆண்டுகளாக இலங்கையின் தமிழ் அரசியல் ஓடிக்கொண்டிருந்தது. ஆனால், இந்த முறை அந்தக் குமிழ் வெடித்து விட்டது.' என்கிறார் அகிலன்.

மேலும், தமிழ் தேசிய அரசியல்வாதிகளுக்கான எதிர்ப்பு வாக்காகத் தான் தேசிய மக்கள் சக்திக்கு வாக்குகள் விழுந்தன என்கிறார் அகிலன். இந்தத் தேர்தல் முடிவுகளை இரு விதமாகப் பார்க்கலாம். முதலாவதாக, தமிழ் தேசிய அரசியலுக்கான எதிர்ப்பை வெளிப்படுத்தும் தேர்தலாக அமைந்திருந்தது. இரண்டாவதாக, தென் பகுதியில் பெரும் மாற்றம் வந்திருப்பதை பார்த்தார்கள். அதே போல வடக்கிலும் ஒரு மாற்றம் தேவை என்ற பார்வையும் சேர்ந்துதான் இந்த வாக்களிப்பு நடந்தது' என்கிறார் அவர்.

### ஒரு தமிழன் உள்ளவரை தமிழ்த்தேசிய அரசியல் நீடிக்கும்

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இதில் பெரும் நம்பிக்கையோடு இருக்கிறார். ஒரு தமிழன் உயிரோடு இருக்கும் வரைக்கும் தங்கள் தேசிய விடுதலைக்காக தொடர்ந்து அவர்கள் பயணித்துக் கொண்டிருப்பார்கள்' என பிபிசிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார் அவர்.

ஆனால், அவர்களுக்குப் பெரும் சவால்கள் காத்திருக்கின்றன என்கிறார் அகிலன் கதிர்காமர். 'தற்போது அவர்கள் மிகவும் சிதறிப் போயிருக்கிறார்கள். தாங்கள் மீண்டும் ஒன்றாக இயங்க வேண்டும் என்ற கோஷங்கள் எழ ஆரம்பித்திருக்கின்றன. இந்த தமிழ் தேசிய அரசியல், மக்களின் நாளாந்தப் பிரச்னைகள், வறுமை, பாடசாலை விலகல், வேலையின்மை போன்றவற்றையெல்லாம் பிரச்சனையாக பார்க்கிறார்களா, அதற்கான தீர்வுகளை யோசிக்கப் போகிறார்களா என்ற கேள்வி இருக்கிறது. இந்தக் கேள்விகளைக் கையாளா விட்டால் தமிழ் தேசிய அரசியல் கடினமாகத் தான் இருக்கும். மக்கள் ஒரு பெரும் மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள்' என்கிறார் அவர்.

இந்தத் தேர்தல் தோல்வியை வைத்து வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் தமிழ் தேசியத்தை நிராகரித்து விட்டதாகச் சொல்ல முடியாது என்கிறார் வி. மணிவண்ணன். 'தமிழ் தேசியத்தை மக்கள் நிராகரிக்கவில்லை. ஆனால், பிளவுகள் தான் தேர்தல் முடிவுகளில் எதிர்மறை விளைவுகளைக் காண்பித்துள்ளன. இனி மூத்த அரசியல் தலைவர்கள் தேர்தலிலிருந்து விலகி ஆலோசகர்களாக செயல்பட வேண்டும். தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றுபட வேண்டும்' என்கிறார் அவர். நன்றி:- பிபிசி

## 29 பிரதி அமைச்சர்கள் ஜனாதிபதி அநுர குமார முன் சத்தியப் பிரமாணம்



ஜனாதிபதி செயலகத்தில் நேற்று 21 நவம்பர் 2024 வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பிரதி அமைச்சர்கள் விபரம் பின்வருமாறு.

01. பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ – பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் 02. நாமல் கருணாரத்ன – விவசாயம் மற்றும் கால்நடை பிரதி அமைச்சர்

03. வசந்த பியதிஸ்ஸ – கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் 04. நலின் ஹேவகே – தொழிற்கல்வி பிரதி அமைச்சர்

05. ஆர். எம். ஜயவர்தன – வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

06. கமகெதர திசாநாயக்க – புத்த சாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் பிரதி அமைச்சர் 07. டி. பி.சரத் – வீடமைப்பு பிரதி அமைச்சர்

08. ரத்ன கமகே – கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வள பிரதி அமைச்சர்

09. மஹிந்த ஜயசிங்க – தொழில் பிரதி அமைச்சர் 10. அருண ஜயசேகர – பாதுகாப்பு பிரதி அமைச்சர் 11. அருண் ஹேமச்சந்திர – வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

12. அண்டன் ஜெயக்கொடி – சுற்றாடல் பிரதி அமைச்சர் 13. மொஹமட் முனீர் – தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர்

14. பொறியியலாளர் எரங்க வீரரத்ன – டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

15. எரங்க குணசேகர – இளைஞர் விவகார பிரதி அமைச்சர்

16. சதுரங்க அபேசிங்க – கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர்

17. பொறியியலாளர் ஜனித் ருவன் கொடித்துவக்கு – துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

18. நாமல் சுதர்சன – பெண்கள் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர்

19. ருவன் செனரத்– மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் 20. கலாநிதி பிரசன்ன குமார குணசேன – போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

21. வைத்தியர் ஹன்சக விஜேமுனி – சுகாதார மற்றும் ஊடக பிரதி அமைச்சர்
22. உபாலி சமரசிங்க –கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

23. ருவன் சமிந்த ரணசிங்க – சுற்றுலா பிரதி அமைச்சர் 24. சுகத் திலகரத்ன – விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

25. சுந்தரலிங்கம் பிரதீப் – பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர்

26. சட்டத்தரணி சுனில் வட்டகல – பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார பிரதி அமைச்சர்

27. கலாநிதி மதுர செனவிரத்ன – கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர்

28. கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும – நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் 29. கலாநிதி சுசில் ரணசிங்க – காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# நெஞ்சம் நிறைந்த மதி அண்ணாவை அவலச்சாவு காவு கொண்டது!



மதி, மதி அண்ணர் என்று அன்பாக அழைக்கப்பட்ட அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட மதிசூடி குலோத்துங்கம் அவர்கள் 20 நவம்பர் 2024 இரவு 11.00 மணியளவில் அவலச் சாவினைத் தழுவிக் கொண்டார் என்பதை நெஞ்சு நிறைந்த துயரத்தோடும் துக்கத்தோடும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எனக்கும் மதி அண்ணருக்கும் இடையிலான உறவு 40 ஆண்டுகள். 1983 ஆரம்ப காலங்களில் அங்கொன்றும் இன்னொன்றுமாக விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக நாம் செயற்பட ஆரம்பித்த காலத்தில் வன்கூவரில் இருந்து ரொறன்ரோவுக்கு இடம் பெயர்ந்த மதி அண்ணரும் கனடாவுக்கு குடி பெயர்ந்த நண்பர் அசோகன் அவர்களும் எம்மோடு இணைந்து கொண்டார்கள்.

அன்றைய காலகட்டத்தில் அனைத்து இயக்க ஆதரவாளர்களும் போட்டி போட்டு கொண்டு இயங்கி வேளையில் மதி அண்ணரும் அவருடன் இணைந்து நண்பர்கள் அசோகன், தவம் போன்றோரும் இரவு பகல் பாராது இடையறாதும் தடையறாதும் பணியாற்றினோம்.

எங்கள் எல்லோரையும் விட மதி அண்ணரிடம் ஒரு பிரத்தியேகக் குணம் இருந்தது. அது தான் அனைவரையும் அன்பொழுகக் கதைத்து பகை உணர்வை வளர்க்காது இயக்கப் பணியாற்றியமையாகும். அதற்காக அவர் ஓர் புலித்தோல் போர்த்திய பசு அல்ல. இயக்கத்திற்கு பணியாற்றுகின்ற நண்பர்களுக்கு ஓர் பிரச்சனை என்றால் அந்த இடத்தில் எந்த நேரமென்றாலும் நிற்கின்ற முதல் ஆளாக மதி அண்ணர் அங்கு நிற்பார்.

கனடாவில் இயக்கத்தை கட்டுக்கோப்பான அமைப்பாக வளர்த்தெடுத்த பெருமை அவரையே சாரும். சகோதர இயக்க மோதல்கள் நடைபெற்ற போது அந்த இயக்கங்களின் நண்பர்களது வீடுகளுக்கு எங்களில் ஒரு சிலரை அழைத்துக் கொண்டு சென்று அவர்களுடன் ஆறுதலாக - அன்பாக உரையாடி தொடர்ந்தும் நட்புறவை வளர்த்த பண்பாளன் மதி அண்ணா.

உலகத்தமிழர் இயக்கமாக மாறிய பொழுது அதனது வளர்ச்சிக்கு ஓர் பத்திரிகை தேவை என்பதை உணர்ந்து உலகத்தமிழர் பத்திரிகையை ஆரம்பிக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்த நினைவுகளை எண்ணிப் பார்க்கின்றேன். அதே போன்று தமிழ்ச்சோலை வானொலியை ஆரம்பித்து அதனை நிர்வகிக்கும் பொறுப்பை நண்பர் அசோகனிடம் ஒப்படைத்தார். அதன் நிகழ்ச்சித் தயாரிப்புக்களை நண்பர் ஞானபண்டிதரிடமும் அண்ணர் ஸ்ரீஸ்கந்தனிடம் வழங்கினார்.

அந்த நேரத்தில் புதிதாக ஓர் சிறிய கார் ஒன்றை வாங்கி அதனை முழுமையாக இயக்கப் பணிக்காகவே பயன்படுத்தினார். அதே போன்று சில காலம் செல்ல நண்பர் அசோகன் ஓர் புதிய கார் ஒன்றை வாங்கி ஒரு மணித்தியால தமிழ்ச்சோலைக்குரிய தகவல்களைக் கொண்டு ஓக்விலில் இருக்கும் வானொலி இயக்கத்திற்கு வாராந்தம் சென்று வருகின்ற நினைவுகள் நெஞ்சில் நிழலாடுகின்றன.

இன்று கனடிய மண்ணில் உலகத்தமிழர் இயக்கம் மாணவர் அமைப்பு, மகளிர் அமைப்பு இளையோர் அமைப்பு மாவீரர் அகவம் என்று விரிந்து பரந்து இருப்பதற்கு மூலவராக இருந்தவர்களில் மதி அண்ணர் குறிப்பிடத்தக்கவர். இன்றைய இளைய தலைமுறை தேசியத்தை நேசிப்பதில் கோபுரத்தின் கலசங்களாகத் திகழ்கின்றார்கள் என்றால் அதன் அத்திபாரமாக திகழ்ந்தவர்களில் மதி அண்ணர் முக்கியமானவர்.

மதி அண்ணாவின் சடுதியான மறைவை ஏற்றுக் கொள்ள இதயம் மறுக்கின்றமையால் கடந்தகால நினைவலைகள் இறங்கி வர மறுக்கின்றன. அவரது நினைவுகள் நீண்டவை. அவரது தேசியத்துக்கான பணிகள் என்றும் நிலைத்திருக்கும்.

மதி அண்ணா! நூறாண்டு வாழ வேண்டிய நீங்கள் சடுதியாய் போய் விட்டீர்கள். இருந்தாலும் என்ன மரணம் பலரை புதைக்கின்றது. நீங்கள் விதைக்கப்படுகின்றீர்கள். தேசியத்தை நேசிக்கும் உள்ளங்களில் முழு மதியாய் வாழ்வீர்கள். என்றும் நீங்கா நினைவுகளுடனும் நட்புடனும்

T.K.பரமேஸ்வரன் - ஈழநாடு